ISSN 1391-9504

# விஜய்

Vijey விජයි

27.10.2010 - மலர் 07, இதழ் 34




தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆவணக் காப்பகம்

குருமார்கள் உள்ளிட்ட பண்டிதர்கள் பலர் இணைந்து ஒல்லாந்தரின் மத நூல்களை சிங்கள மொழியில் மொழி மாற்றம் செய்தனர். அத்துடன், தமிழ் மற்றும் போர்த்துக்கேய மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்தனர். தொடர்ந்து அவற்றை அச்சேற்றினர். புதிய ஏற்பாட்டையும், லத்தீன் மொழியில் எழுதப்பட்ட நூலொன்றையும் பிரசுரம் செய்து வெளியிட்டனர்.

இப்பணியில் மேலும் சில பணியாளர்களும் இணைந்து கொண்டனர். அவர்கள் தேசிய மொழிகளில் பேசும் ஆற்றல் உள்ளவர்கள். அத்துடன், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் இரண்டு குருத்துவக் கல்லூரிகள் (செமினேரிகள்) நிறுவப்பட்டன. அவற்றில் திறமையான இளைஞர்களுக்கு கல்வி பயில வாய்ப் பளிக்கப்பட்டது. கூடவே, உருவ வழிபாட்டை (சிலை வழிபாடு) ஒல்லாந்தர் தடை செய்தனர். அதனை மீறுவோருக்கு கசையடி வழங்கியதோடு, ஒரு வருட சிறைத்தண்டனையும் வழங்கினர்.

இலங்கையில் முதன் முதலாக அச்சகமொன்றை நிறுவி சிங்கள எழுத்துக்களை அச்சுக்கோர்த்த பெருமை ஒல்லாந்தரையே சாரும்.

ஒல்லாந்தருக்கோ போர்த்துக்கேயரிடம் இருந்து தாம் கைப்பற்றிய இடங்களின் பெயர் பட்டியல் அவசியமாகத் தேவைப்பட்டது. அதுவரை போர்த்துக்கேயரால் தயாரிக்கப்பட்டிருந்த தோம்புகள் பாதுகாக்கப்படாமல் கவனிப்பாரற்று ஆங்காங்கே கிடந்தன.

அவற்றில் சிலவற்றை போர்த்துக்கேயர்கள் எரித்துவிட்டனர். 'தோம்பு' என்பது ஆவணக்கோப்பு அல்லது ஆவணக்கட்டு என்ற அர்த்தத்தைக் குறிக்கும் ஓர் போர்த்துக்கேயச் சொல்லாகும்.

ஒல்லாந்தர்களோ, கவனிப்பாரற்றுக் கிடந்தவைகளையும் ஓரளவு அழிந்து போய்க்கொண்டிருந்தவையுமான தோம்புகளின் பகுதிகளைத் தேடிக் கண்டுபிடித்தனர். அவற்றை தமது தேவையின் பொருட்டுப் பயன்படுத்தினர். அவர்கள் இராசகாரியத்தில் ஈடுபடுபவர்களின் இடங்களுக்கான நியம விபரங்களைத் தயாரித்தனர். இந்த தோம்புகள் அனைத்தும் காணிகள் சம்பந்தமானவையாகும். அந்தவகையில், ஒரு தோம்பில் ஒல்லாந்தருக்குச் சொந்தமான கிராமங்கள், காணிகள், தோட்டங்கள் ஆகியவற்றின் விபரங்கள் குறித்து வைக்கப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாணத்தில் 5 பாடசாலைகள் அடுத்த வருடம் மூடப்படும்

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் பத்துக்கும் குறைந்த எண்ணிக்கையி லான மாணவர்களைக் கொண்ட ஐந்து பாடசாலை களை அடுத்த வருடத்தி லிருந்து மூடுவதற்குத் தீர்மானித்துள்ளதாக மேல்



மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

மஹர தம்புவ கனிஷ்ட வித்தியாலயம், மினுவங் கொட பிடுவல்கொட ஆரம்ப பாடசாலை, வலல்லாவிட குலவிட வடக்கு ஆரம்ப பாடசாலை, திவுலப்பிட்டிய மாஹின் கமுவ ஆரம்ப பாடசாலை மற்றும் அகலவத்தை வெடிகந்த ஆரம்ப பாடசாலை ஆகியனவே மேற்படி மூடப்படவுள்ள பாடசாலைகளாகும்.

விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான வார இறுதி பயிற்சி நெறி

## ஆசிரியப் பயிற்சி பெறாதவர்களுக்கான இறுதிச் சந்தர்ப்பம்



அரச பாடசாலை, அரசின்கீழ் இயங்கும் தனியார் பாடசாலை மற்றும் பிரிவெனா பாடசாலை ஆகியனவற் றில் கடமையாற்றும் பயிற்றப்படாத ஆசிரியர்களை வார இறுதி நாட்களில் நடைபெறும் ஆசிரியப் பயிற்சி நெறிக்கு இணைத்துக்கொள்வதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் கற்பிக்கும் பயிற்றப் படாத ஆசிரியர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க முடியுமெனவும் அவர்களுக்கான இறுதிச் சந்தர்ப்பம் இதுவெனவும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான விபரங்களை கல்வி அமைச்சின் ஆசிரிய நிர்வாகப் பிரிவின் 011-2784618 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். பயிற் றப்படாத ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி பாடத்திட்டத்தின் முதற்கட்டம் கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட தோடு, தற்போதளவில் 44 பயிற்சி நிலையங்களில் நடைபெற்று வருகின்றது. இவை தவிர, மேலும் 7 புதிய பயிற்சி நிலையங்கள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

# கிழக்கு, தென்கிழக்கு பல்கலை மாணவர்களுக்கு இத்தாலி பல்கலைக்கழகங்களில் புலமைப்பரிசில்

கிழக்கு மற்றும் தென்கிழக்குப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு இத்தாலிய பல்கலைக்கழகங்களில் பயில்வதற்கான புலமைப்பரிசில்களை வழங்க இலங்கைக்கான இத்தாலியத் தூதுவர் ரெபென்ஸ் எனா ஃபெடெல் இணக்கம் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதற்கமைய, இத்தாலியில் பிருகா, சீரு ஆகிய பல்கலைக்கழகங்களில் அனுமதி வழங்கும் புலமைப்பரிசில்களுக்காக எதிர்வரும் வருடம் பெப்ரவரி மாதத்தில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலுக்கமைய, ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

# தேசிய பாடசாலை நடவடிக்கைகளை ஆராய கல்விப் பணிப்பாளர்கள் நியமனம்

தேசிய பாடசாலைகளில் பாடசாலை நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து பார்ப்ப தற்கு 20 பாடசாலைகளுக்கு ஒருவர் என்ற ரீதியில் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி, நாடளாவிய ரீதியில் அமைந் துள்ள 339 தேசிய பாடசாலைகளும் உள்ள டங்கும் வகையில் பணிப்பாளர்கள் நியமிக் கப்பட்டுள்ளதாகவும் சகல பணிப்பாளர் களும் தேசிய பாடசாலை இணைப்பாளரி டம் பொறுப்புக்கூற வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். கல்வி அமைச்சில் இதுவரை இருந்த தேசிய பாடசாலைப் பணிப்பாளர் பதவி இல்லாமல் செய்யப் பட்டு, அதற்குப் பதிலாக தேசிய பாடசாலை இணைப்பாளர் எனும் பெயரில் பதவியொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.



# போட்டி முடிவுத் திகதி நீடிப்பு

***'சேகரிப்போம்-சுவீகரிப்போம்' பரிசுப்போட்டியில் கலந்துகொள்ளும் பொருட்டு, பூரணப்படுத்தப்பட்ட இலங்கை வரைபடத்தினை அனுப்பி வைப்பதற்கான முடிவுத் திகதி அநேக வாசகர்களின் வேண்டுகோளுக் கிணங்க 03.11.2010 வரை நீடிக்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். பூரணப்படுத்தப்பட்ட இலங்கை வரைபடத்தையும் ஏற்கனவே நாம் வழங்கிய கூப்பனையும் நிரப்பித் தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள்.***

**அனுப்ப வேண்டிய முகவரி:** பரிசுப்போட்டி, 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.



# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு ஓர் அரிய வாய்ப்பு

இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை 'விஜய்' இல் பிரசுரிக்க விரும்புபவர்கள், மாணவரின் விபரத்துடன் அவரது புகைப்படத்தையும் இணைத்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன்,

**புலமைப்பரிசில் சித்தியடைந்தோர்,**
**'விஜய்'**
**த.பெ. எண் 2037, கொழும்பு.**

என்ற முகவரிக்கு நொவெம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். பிந்திக் கிடைப்பவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. ஒரே வகுப்பில் பலர் சித்தியடைந்திருப்பின் அவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் குழுவாக எடுத்துக்கொண்ட புகைப்படங்களை யும் அனுப்பலாம். கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டா.

# 'யுனெஸ்கோ' அமைப்பின் அனுசரணையில் மாணவர்களுக்கான சித்திரப் போட்டி

'எனது நகரத்தின் பெருமைகள்' என்ற தலைப்பில் நாடளாவிய ரீதியில் மாணவர்களுக்கிடையே யான சித்திரப் போட்டியொன்று நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. ஜப்பான் நாட்டின் கும்மாத்தோ யுனெஸ்கோ அமைப்பின் மேற்பார்வையில் நடத்தப்படுகின்ற மேற்படி சித்திரப் போட்டியின் மூலம் வளர்ந்து வரும் பிள்ளைகள் தமது கலாசாரப் பெருமைகளையும் அனுபவங் களையும் சர்வதேச சமூகத்துடன் பகிர்ந்துகொள்ளக்கூடிய வாய்ப் புக் கிட்டும் என்று போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள் ளனர்.

'எனது நகரத்தின் பெருமைகள்' என்ற தொனிப்பொருளிலேயே சித்திரங்கள் அமைதல் வேண்டும். இதற்கமைய, உங்கள் பிரதேசத் தில் அல்லது நகரத்தில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடங்கள், நினைவிடங்கள், உறுதி செய்யப்பட்ட அல்லது உறுதி செய்யப்படாத கலாசார அடையா ளங்கள், சம்பிரதாய கட்டடங்கள், வரலாற்று முக்கியத்துவம் மிக்க படைப்புக்கள் அல்லது அவற்றை ஒத்த இயற்கை சூழல் என இவற்றில் எதையாவது பிரதான கருவாகக் கொண்டு சித்திரங்கள் அமைதல் வேண்டும்.

சித்திரமானது, 38cmx54cm அளவைக் கொண்டிருத்தல் வேண்டும். பொருத்தமான கடதாசியில் எந்தவொரு வர்ணப்பூச்சையும் பயன்படுத்தி சித்திரங்களை வரையலாம். 5 வயதிற்கும் 15 வயதிற்கும் இடைப்பட்ட வர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம்.



போட்டியாளர்கள் தமது சித்திரத்துடன் முழுப்பெயர் (ஆங்கிலத்திலும்), வயது, பிறந்த திகதி, வீட்டு முகவரி, தொலைபேசி இலக்கம், பாடசாலையின் பெயர், பாடசாலை முகவரி, மாவட்டம் ஆகியன வற்றைக் குறிப்பிட்டு விண்ணப்பப்படிவம் ஒன்றைத் தயாரித்து, அதில் பாடசாலை அதிபரின் முத்திரை இடப்பட்ட கையொப் பத்துடன் அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

போட்டியில் முதலாம் இடத்தைப் பெறு கின்றவருக்கு ஜப்பானின் கும்மாத்தோ யுனெஸ்கோ அமைப்பின் தலைவர் விருதுடன் வெற்றிப்பதக்கம், சான்றிதழ் மற்றும் வெற்றியாளர் வரைந்த சித்திரத்தின் பிரதி ஆகியன வழங்கப்படும். விசேட விருதுகள் பெறுவோர் எனும் பட்டியலின் கீழ் ஒன்பது பேர் தெரிவு செய்யப்படுவது டன், மேலும் 38 பேருக்கு ஊக்குவிப்பு விருதுகளும் வழங் கப்படும்.

வெற்றி பெறுவோ ரின் சித்திரங்கள் ஜப் பானின் கும்மாத்தோ யுனெஸ்கோ 2011 கெலண்டரில் இடம் பெறச் செய்யப்படும் என்பதுடன், அதன் ஒரு பிரதி போட்டி யாளர்களுக்கு வழங்கப்படும்.

**போட்டி முடிவு: 2010 நொவெம்பர் 10 ஆம் திகதி.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**
**பணிப்பாளர்,**
**சிறுவர் கலைப்பிரிவு,**
**53/7, கிரகரி வீதி,**
**கொழும்பு-07.**
**தொ.பே.**
072 9798439

30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.

10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை
Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லோம் வழங்கப்படும்.
எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/- பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட குடியிருப்புக்கள்

மனிதனின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றே உறைவிடமாகும். அந்தத் தேவையை நிறைவு செய்யும் வகையில் மனிதன் விதம் விதமான உறைவிடங்களை அமைத்து வாழ்ந்து வந்தான். மழை, வெயில், பனி ஆகிய பாதிப்புகளில் இருந்து பாதுகாப்புப் பெறவும் எதிரிகளிடம் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் ஆரம்பகால மனிதனுக்கு குடியிருப்புக்கள் தேவைப்பட்டன. ஆனால், இன்று அந்தக் குடியிருப்புக்கள் வெவ்வேறு விதங்களில் உருவாகி வருவதைக் காணலாம்

## ஜப்பானிய வீடு




ஜப்பானியர்கள் வீடுகளை அமைப்பது இலகுவான மூலப் பொருட்களையும் மற்றும் கார்போர்ட் போன்றவற்றையும் கொண்டே ஆகும். அந்நாட்டில் அடிக்கடி (சில பகுதிகளில்) பூமியதிர்ச்சிகள் ஏற்படுவதால் அதற்குத் தாக்குப் பிடிக்கும் வகையில் இவ்வாறான செலவு குறைந்த இலகுவான வீடுகளை அமைப்பதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர். இந்த வீடுகளில் 'டடாம்' என்ற பண்புல்லால் நெய்யப்பட்ட பாய்களைக்கொண்ட அறைகள் வேறுபடுத்தப்பட்டிருக்கும்.



## பண்ணை வீடு

பண்ணை நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகளுக்காகவும் ஏனைய தொழிலாளர்கள் தங்குவதற்கும் வீடுகள் உள்ளன. அவை பண்ணை/விவசாய வீடு என்றழைக்கப்படும். விவசாயப் பண்ணைக்கு/நிலத்திற்குத் தேவைப்படும் அனைத்து விடயங்களும் இந்த வீடுகளில் காணப்படுவது சிறப்பம்சமாகும். நீர், மின்சாரப் பிறப்பாக்கி வசதிகள்கூட இவ்வீடுகளில் இருக்கும்.

## விண்ணைத் தொடும் கட்டடங்கள்



சன நெருக்கடி காரணமாகவும் நிலப்பற்றாக் குறை காரணமாகவும் நகர்ப்புறங்களில் அடுக்கு மாடி வீட்டுத் தொகுதிகள் (Apartment) நிர்மாணிக்கப்படுகின்றன. சனத் தொகைப் பரம்பலுக்குத் தீர்வாக சிறியளவு நிலத்தில் கூடுதலான வீடுகளை நிர்மாணிப்பது வீடமைப்புத் தேவைக்கான மாற்று வழியாகும். இவை ஆடம்பர வீட்டுத் தொகுதிகளாகவும் பெரும் எண்ணிக்கையிலான வீடுகளைக்கொண்ட பல மாடிகளைக்கொண்ட தொகுதிகளாகவும் உள்ளன. இந்த வீடுகள் நவீன வசதிகளுடன் மின்தூக்கி (Lift) வசதியையும் கொண்டதாக இருக்கும்.



## தலதா மாளிகை

புனிததந்தம் வைக்கப்பட்டுள்ள தலதா மாளிகை கண்டிய காலத்து கட்டட நிர்மாணமாகும். இந்நாட்டின் கட்டடக்கலை நிர்மாணத்திற்கு சான்றாக அமைவதோடு, உலகிற்கும் அதுபற்றி எடுத்துக்காட்டுவதாக தலதா மாளிகையின் கட்டட அலங்காரம் அமைகின்றது. அரச மண்டபம், அவை அரங்கம், வளைவு வடிவ சுவர்கள், மரத்தாலான தூண்கள் என்பன தலதா மாளிகைக்கு மேலும் அலங்காரமாக அமைகின்றன.

## கிறிஸ்தவ தேவாலயங்கள்



இலங்கையில் ஒல்லாந்தர் கால கட்டட நிர்மாணத்திற்கு சான்று பகரும் வகையில் கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 12ஆம் 15ஆம் நூற்றாண்டு காலத்திற்குரிய தொகுதிக்கட்டடக் கலைக்குரிய சுவர்கள் தூண்கள், உள் மண்டபங்கள் இந்த தேவாலயங்களில் காணப்படுகின்றன.

## உலகின் மிக உயரமான கட்டடம் பர்ஜ் கலிபா



ஐக்கிய அரபு இராச்சிய நாடான டுபாயில் உலகின் மிகவும் உயரமான கட்டடமான 'பர்ஜ் கலிபா' என்ற கட்டடம் அமைந்திருக்கின்றது. 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இதன் கட்டட நிர்மாணப்பணிகள் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பூர்த்தியடைந்தன. இதன் உயரம் 828 மீற்றர்கள் ஆகும். கட்டட நிர்மாணத்திற்காக இலங்கை நாணயத்தில் 3 லட்சம் கோடி ரூபாய்கள் (150 கோடி ஸ்ரேலிங் பவுன்) செலவிடப்பட்டுள்ளது.

## இந்துக் கோவில்



இந்துக்களின் வழிபாட்டுத் தலமான கோயில்கள் அலங்காரங்களுடனும் இறைவனின் உருவங்களுடனும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் காணப்படும் பண்டைய கோயில்களின் கட்டடக்கலை அலங்காரங்களைப் பின்பற்றியே கோயில்கள் நிர்மாணிக்கப்படுகின்றன.



## முஸ்லிம் பள்ளிவாசல்கள்

முஸ்லிம் பள்ளிவாசல்கள் அரேபிய கட்டடக்கலையை ஒத்ததாக உள்ளன. அவை குப்பா, மினரா ஆகியவற்றைக் கொண்ட அலங்காரத்துடனும் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டதாகவும் உள்ளன. பகல் நேரங்களில் நிலவும் கடும் உஷ்ணத்திற்கு குளிர்ச்சியைக் கொடுப்பதாகவும் இரவில் குளிர் நேரத்தில் ஓரளவு உஷ்ணத்தைத் தருவதாகவும் இந்த பளிங்கு கற்கள் உள்ளன. அத்துடன், பல்வேறு விதமான வடிவமைப்புக்களில் முஸ்லிம் பள்ளிவாசல்களைக் காணலாம்.

நாகரிக வளர்ச்சியுடன் கட்டட நிர்மாணத்திலும் அலங்காரம், ஆடம்பரம், கவர்ச்சி என்பன புகுந்துவிட்டன. பல்வேறு வடிவங்கள் சுவர்கள், தூண்கள், கூரை என்பன அமைக்கப்படுவது வழக்கமாகிவிட்டது. அழகிய வளைவுக்கூம்பு வடிவங்கள் மற்றும் பளிங்காலான சுவர்கள், தூண்கள் என்பன இக்கட்டட நிர்மாணத்திற்கு மெருகூட்டுவதாக அமைகின்றன.

இவற்றில் மத ஸ்த்தலங்களுக்கு சிறப்பான இடம் காணப்படுகின்றது.நவீன மனிதன் பண்டைய மனிதனைவிட, சற்று முன்னோக்கிச் சென்று விதம் விதமான மூலப்பொருட்களைப் பயன்படுத்தி அழகிய கட்டடங்களை நிர்மாணிப்பதில் வெற்றி கண்டுள்ளான்.

சனத்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப, மானிட குடியிருப்புத் தேவையை நிறைவு செய்யும் வகையில் மாடி வீட்டுத்தொகுதிகளை அமைத்து தீர்வு காண்பது கட்டட நிர்மாணத்துறையின் எதிர்காலத் திட்டமாகும்.

- அமீர் ஹுஸைசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்வி

## முகாமைத்துவம் - 26

### கற்றலுக்கான ஆலோசனைகள்

# ஆளுமை வகைகள்

**1. அகமுகம் - புறமுகம் (Introversion - Extroversion):**

Jung எனும் உள மருத்துவர் நாம் பிறருடன் ஏற்படுத்தும் தொடர்புகளைக்கொண்டு மனிதர்களை அகமுகிகளாகவும் புறமுகிகளாகவும் வகுத்துள்ளார்.

| அகமுகம் | புறமுகம் |
|---|---|
| ★ அதிகமாகக் கவலைப்படுதல் | ★ எதிலும் கவலைப்படாமை |
| ★ தனிமையை விரும்புதல் | ★ எவருடனும் சிநேகமுடைமை |
| ★ தனிமையாக வேலை செய்தல் | ★ பிறருடன் இணைந்து வேலை செய்தல் |
| ★ தனது பொருட்களில் கவனம் | ★ கூச்சப்படாமை |
| ★ கதைப்பது குறைவு | ★ கலகலப்பாகக் கதைத்தல் |
| | ★ தனது உடைமைகளைப் பொருட்படுத்தாமை |

**2. உடல்சார் வகைகள் (Physical types):**

Kretschmer என்பவர் உடலமைப்புத் தொடர்பாக மனிதர்களை மூன்று வகைப் படுத்தினார்.

(i) **கட்டையான, பெருத்த உடலுடையோர்** - இவர்கள் அநேகமாகப் புறமுகிகளாகவும் பிறரால் விரும்பப் படுவோராகவும் உள்ளனர்.

(ii) **பருத்த தசையும் எலும்புக்கட்டும் உடையோர்** - இவர்களுக்கு அதிகளவு சக்தியும் எதிர்க்கும் ஆற்றலும் உண்டு.

(iii) **மெலிவான உயரமானவர்கள்** - இவர்கள் பிறரில் பிழை காண்பவர்களாகவும் உணர்ச்சி வசப்படுவோராகவும், அகமுகிகளாகவும் உள்ளனர்.

இவர்கள் ஆங்கிலத்தில் முறையே; Pyknic, Athletic, Asthenic என அழைக்கப்படுவர்.



**3. உடற் கூற்று வகைகள் (Soma types):**

இதை Sheldon என்பவர் பின்வரும் வகுப்புக்களாகத் தருகின்றார்.

(i) மெதுமையான வட்டமான வயிறுடன் கூடிய உடல்.

(ii) கட்டான, தடித்த தோலுடைய பாரமான உடல்.

(iii) மெலிவான உடல்.

இவை ஆங்கிலத்தில் முறையே; Endonorphic, Mesomorphic, Ectomorphic என வழங்கப்படும். இப்பகுப்பும் கிறெச்மரின் பகுப்பை ஒத்தது.




**4. சுபாவ வகைகள் (Temperamental types):**

காரணிப் பகுப்பு (Factor analysis) என்னும் புள்ளி விபரவியல் முறையினால் நடத்தப்பட்ட ஆய்வுகளில் உடற்கட்டுக்கும் சுபாவத்துக்கும் உயர்ந்த தொடர்பு (அதாவது, இணைப்பு-- Correlation) உண்டென அறியப்படுகின்றது.



இதன்படி, நபர்கள் 3 வகைப்படுவர்.

(i) **சுக விருப்புடைய ஆளுமை** (Viscerotonia) - இவர்களுக்கு ஓய்வில் விருப்பமும் நாகரிக வசதிகளை அனுப விக்க ஆசையும் உண்டு. உறங்க விருப் பமும் நண்பர்களையும் கொண்டவர்கள்.

(ii) **செயலார் ஆளுமை** (Somatotonia)- இவர்கள் துணிச்சல், வீரச் செயலில் விருப்பம், தைரியம், உடல் வலிஷய அசட்டை செய்தல் ஆகிய பண்புகளை உடையவர்கள்.

(iii) **சிந்தனைசார் ஆளுமை** (Cerebrotonia)- இவர்கள் கட்டுப்பாடு, உணர்ச்சிவசப்படல், கூச்சம், சமூகத்தொடர்பில் வெறுப்பு ஆகிய பண்புகளை உடையவர்கள்.

**5. சமூகவியல் வகைகள் (Sociological types):**

Alleport என்பவர் மனிதர்கள் சமூகத்தில் கொண்ட நடத்தைகள் தொடர்பான ஆளுமையைப் பின்வரும் 6 தொகுதிகளாக்கினார்.

(i) **கொள்கை வகை** (Theoretical) -தத்துவ அறிஞர், விஞ்ஞானி

(ii) **பொருளாதார வகை** (Economic) - வியாபாரி, வங்கிக்காரர்

(iii) **அழகுணர்வு வகை** (Aesthetic) - கவிஞர்,நடிகை, கலைஞர், சிற்பி

(iv) **சமூக வகை** (Social) - தொண்டர், பொதுநலமுடையோர்

(v) **அரசியல் வகை** (Political) - அரசியல்வாதி, ஆதிக்கமுடையோர்

(vi) **சமய வகை** (Religious) - மதகுரு, சமயத் தொண்டர்

(தொடரும்)

**எம்.ஏ.எஃப். சப்ரானா**



# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



இ/அல்-மக்கியா மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் பாத்திமா நுஸ்கா, 167 புள்ளிகளுடன், இரத்தினபுரி மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர், எம்.சரூக்-பரினா பேகம் ஆகியோரின் புதல்வியாவார்.



ஹொ/வியாங்கல்லை மு.ம.வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஏ.மொஹமட், 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அப்துல் ஸலீம்-எஃப்.ஹுஸைனா தம்பதியரின் புதல்வராவார்.



ஹொ/வியாங்கல்லை மு.ம.வித்தியாலய மாணவன் எம்.ஹர்ஸான், 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.ஹஸ்மி-எஃப்.நஸ்லிபா தம்பதியரின் புதல்வராவார்.



ஹொ/வியாங்கல்லை மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.ஸின்ஹத், 151 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம். பாஸில்-ஸிம்தியா தம்பதியரின் புதல்வராவார்.



வெலிகம அந்நூர் மு.ம.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் உம்மு ஸலமா, 167 புள்ளிகளைப் பெற்று, மாத்தறை மாவட்டத்தில் இரண்டாமிடத்தைப் (தமிழ் மொழி மூலம்) பெற்றுள்ளார். இவர், எம்.அஃலம்-ஸித்தி பாயிஸா தம்பதியரின் புதல்வியாவார்.

**திஹாரிய, அல்-அஸ்ஹர் ம.கல்லூரியைச் சேர்ந்த 11 மாணவர்கள் மேற்படி பரீட்சையில் சித்தியடைந்துள்ளதுடன், மாவட்ட மட்டத்தில் (தமிழ் மொழி மூலம்) 1, 3, 4, 5 ஆகிய இடங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அம்மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் நிற்பதைப் படத்தில் காணலாம்.**

*முதல் வரிசை (இ.வ)-எஃப்.ஸைபா (145 புள்ளிகள்), எஃப்.சுமையா (181 புள்ளிகள்), எஃப்.நதா (163 புள்ளிகள்), எஃப்.சப்கானா (147 புள்ளிகள்), எஃப்.ஷினீரா (172 புள்ளிகள்), அம்னா ஸைனப் (146 புள்ளிகள்);*

*இரண்டாவது வரிசை (இ.வ)-பவ்சுல் கரீம் (152 புள்ளிகள்), எம்.அன்ஸாப் (176 புள்ளிகள்), எம்.ஸஹீம் (156 புள்ளிகள்), யூசுப் அலி (157 புள்ளிகள்), ஏ.அஸ்பாக் (179 புள்ளிகள்);*

*மூன்றாவது வரிசை (இ.வ)-இஸட்.நகூஹா (ஆசிரியை), எஸ்.பரீதா (ஆசிரியை), ஏ.ரிகாஸா (ஆசிரியை), எம்.ரூமி (ஆசிரியர்).*





வெலிகம அந்நூர் மு.ம.ம.வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.பர்ஹான், 162 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.பாரூக்-உம்மு பாஹிரா தம்பதியரின் புதல்வராவார்.



வெலிகம அந்நூர் மு.ம.ம. வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஹுஸ்னுர் ரிழா, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.நவாஸ்-நூருல் நஸீஹா தம்பதியரின் புதல்வியாவார்.



வெலிகம அந்நூர் மு.ம.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ருஸ்னி அஹமட், 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.அதுபர்-எஃப்.ரிஸ்மா தம்பதியரின் புதல்வராவார்.



வெலிகம அந்நூர் மு.ம.ம.வித்தியாலய மாணவன் எம்.மதீர், 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், எம்.மர்ஜான்-எஃப்.சுஹதா தம்பதியரின் புதல்வராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


புராதன ஏதென்ஸ்

# உலகின் நகரங்

வனாந்தரங்களில் விலங்கோடு விலங்காக வாழ்ந்த ஆரம்பகால மனிதனுக்கு தேவைகள் என்று எவையும் இருக்கவில்லை. காட்டிலுள்ள காய், கனி, கிழங்குகளைப் பறித்தும் கையில் அகப்பட்ட சிற்றுயிர்கள், விலங்குகளைக் கொன்று புசித்தும் குகைகளிலும், காடுகளிலும் கண்ட கண்ட இடங்களில் உறங்கியும் வாழ்ந்திருக்கிறான். காலம் மாற மாற அவனது இனம் பெருகியது. இதனால் உணவுத் தேவையில் ஏற்பட்ட போட்டி மனப்பாங்கு காரணமாக தடி, ஈட்டி, அம்பு, வில் போன்றவற்றை உருவாக்கி விலங்கினங்களை வேட்டையாட வைத்தது. பின்னர் நெருப்பின் பயன்பாடு கண்டுபிடிக்கப்பட்டதால் கிழங்குகளையும், விலங்குகளையும் நெருப்பிலிட்டு சுட்டு உண்ணத் தொடங்கினான் மனிதன்.

இதனைத் தொடர்ந்து மனிதனிடத்தில் இயற்கையாக உருவான சிந்தனா சக்தியானது அவனை நீர் நிலைகளை நாடிச்சென்று உறைவிடங்களை உருவாக்கி, மிருக வளர்ப்பு, பயிர்செய்கை ஆகியவற்றில் ஈடுபட வைத்தது. அதனால் ஆரம்பக் குடியிருப்புகள், நைல்நதி, யூப்ரடீஸ், தைக்ரீஸ், இந்து, ஹுவாங்கோ போன்ற நதிக்கரையோரங்களில் உருவாகின. அவை பின்னர் கிராமங்களாகமாறி கிராமங்களுக்கிடையே பண்டமாற்று ஏற்பட்டு வர்த்தகம் ஆரம்பமாகி கிராமங்கள் நகரங்களாகின. ஆரம்பகால நகரங்கள் உருவாவதற்கு நதிக்கரைகளும், துறைமுகங்களுமே முக்கிய காரணமாக அமைந்துள்ளன.


சீன புராதன நாகரிகம்

உலகின் புராதன நகரங்களில் முதன்மை யானவையும் முக்கியமானவையுமாக மொசப்பத்தேமியா, எகிப்து, மொஹஞ்சதாரோ, ஹரப்பா,ஏதென்ஸ், ரோம் போன்ற நகரங்கள் கருதப்படுகின்றன.


மெசப்பத்தேமிய ஓவியம்

## மொசப்பத்தோமியா (ஈராக்)

உலகத்தில் நகர் ஆக்கம் கி.மு.3500 ஆம் ஆண்டு முதல் மொசப்பத்தோமியா என்றழைக்கப்படும் தற்போதைய ஈராக்கிய நகரிலிருந்து ஆரம்பமாகின்றது. மொசப்பத்தோமியா என்பதன் பொருள் 'நதிகளுக்கிடைப்பட்ட நகர்' என்பதாகும். யூப்ரடீஸ் தைக்ரீஸ் நதிகளுக்கிடையே மொசப்பத்தோமியா அமைந்துள்ளது. இந்த நதிகள் பாரசீகக்குடாக் கடலில் கலப்பது குறிப்பிடத்தக்கது. நகரத்தின் நுழைவாயில் இதுவென்பதால் இதனை வரலாற்றாசிரியர்கள் கலாசாரத்தின் தொட்டில் என்கின்றனர்.

மனிதன் காடுகளிலும், கடலிலும் இயற்கையாகக் கிடைத்தவற்றை உண்டும், காடுகளில் எங்காவது உறங்கியும் வாழ்ந்த காலம் மாறி நீர் நிலைகளை அண்டி வாழும் நிலை ஏற்பட்டதே, நகரத்தின் ஆரம்பமாகும். கி.மு.3500 முதல் 1500 வரையிலிருந்து வந்த பண்டைய மொசப்பத்தோமியாவில் ஊர், நிர்பர், இரிடு,உருக், சீழ், லகாஸ் போன்ற நகரங்கள் இருந்ததாக வரலாறு கூறுகின்றது.

## எகிப்து அலெக்ஸாந்திரியா

அடுத்து கி.மு3100 இல் உருவான எகிப்திய நகரைக் குறிப்பிடலாம். நைல் நதிப்பிரதேசத்தை மையமாகக் கொண்டு உருவான நகர் இதுவாகும். விக்டோரியாவில் ஆரம்பமாகும் 'நைல்' நதியானது எகிப்தை ஊடறுத்து மத்திய தரைக்கடலில் கலக்கின்றது. துறைமுக நகர் மகா அலெக்ஸாந்தரினால் கைப்பற்றப்பட்ட பின்னர் அலெக்ஸாந்திரியா என்றழைக்கப்பட்டது. செங்கடல் எல்லையில் அமைந்த இந்நகரானது கடல்வழி, கடல்வழி வர்த்தகத்திற்கும் அனுகூலமாக அமைந்திருந்தமையும்,இந்திய, இலங்கை, சீன வர்த்தகப் பொருட்கள் செங்கடல் வழியாகவே ஐரோப்பா வரை சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

வரி அறவீட்டின் மூலமே எகிப்து அக்காலம் முதல் பொருளாதாரத்தை மேம்படுத்தி வந்துள்ளதோடு, இது பாலைவனப் பிரதேசத்தை அதிகமாகக் கொண்டுள்ளமையால் நைல்நதிக்கரைகளை அண்டியதாக நகரங்களை உருவாக்கி பயிர்செய்கையை வளப்படுத்தி வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இங்கு கோதுமை, மிலட், பார்ளி, கடதாசி உற்பத்திக்கான 'பப்பிரஸ் புல்' என்பன பயிர்செய்யப்பட்டு வந்துள்ளன.

## மொஹஞ்சதாரோ, ஹரப்பா



உலகில் அடுத்து இந்திய பாகிஸ்தானிய பிரதேசங்களில் உருவான மொஹஞ்சதாரோ, ஹரப்பா நகரங்களைக் குறிப்பிடலாம். கி.மு.2500 அளவில் இந்நகர்கள் உருவாகியுள்ளன. மொஹஞ்சதாரோ நகரில் ஒன்பது மாடிக் கட்டடமொன்று இடிபாடொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, மாடி வீடுகள்,மதில்கள், கழிவறைகள், தானியக் களஞ்சியங்கள் என்பனவும் இந்நகர்களில் காணப்பட்டதாக கூறப்படுகின்றது. இவை தவிர இந்து நதிக்கரையை அண்மித்து உருவான சிறிய நகர்களாக ஸன்ஹுதாரோ, லோத்தா, கலிபன்,அலம்கீர், ரூபார் என்பனவற்றைக் குறிப்பிடலாம். இந்து நதிக் கழிமுகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட லோத்தாநகர் துறைமுக நகராக இருந்திருக்கலாம் என்றும், வெளிநாட்டு வர்த்தகத்தின் மையமாக இதனைக் கருத முடிமென்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்தியாவின் இமயமலையில் ஆரம்பமாகும் இந்து நதியானது பாகிஸ்தானின் கராச்சியை அண்மித்த அரபிக்கடலில் சங்கமமாவது குறிப்பிடத்தக்கது.

உலகில் ஆரம்பத்தில் தோன்றிய நகர்களில் பயிர்ச்செய்கையும் வர்த்தகமுமே முக்கிய பொருளாதாரப் பண்புகளாக இருந்து வந்துள்ளன. கோதுமை, மிலட், வாற்கோதுமை, சோளம் போன்ற தானியங்களையும், கால்நடைகளின் மாமிசம்,பால் போன்றவற்றையுமே அவர்கள் பிரதான உணவாகக் கொண்டுள்ளனர். மன்னராட்சியோ, கோத்திர ஆட்சியோ நிலவாமல், சமயக் குருமார்களின் அதிகாரத்தைக் கொண்ட ஆட்சியே இந்நகர்களில் நிலவிவந்துள்ளது.


ஹரப்பா புராதன குடங்கள்

இருந்தபோதிலும் இந்து நதிக்கரையில் உருவான நகரங்களில் நகரப்பண்புகள் அதிகமாக இருந்திருப்பது அறியப்படுகின்றது. திட்டமிட்டு, ஒழுங்கமைக்கப்பட்ட நகரங்கள், நேர்த்தியான வீதிகள், முறையான வடிகால்கள், பாதையோர மாடிவீடுகள், சகல வீடுகளுக்குமான தனியான கிணறுகள், கழிவறைகள், குளியல் தடாகங்கள் போன்றன இந்த நகர்களில் காணப்பட்டுள்ளன. இந்நகரவாசிகள் தமது ஓய்வு நேரத்தை தாயக்கட்டை ஆடுவதில் கழித்துள்ளனர்.


ஹரப்பா அழிவுகள்

மொஹஞ்சதாரோ நகரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கழிவுப் பொருட்களிலிருந்து இங்கு கைத்தொழிற்சாலைகள் இருந்திருக்கலாம் என அறியப்படுகின்றது. கல்பதித்த மாலைகள், கடலாமை ஓட்டு அலங்காரப் பொருட்கள், பீங்கான், பாண்டங்கள், தங்க ஆபரணங்கள், சில்லுகள் பொருத்தப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் என்பன இந்நகர்களின் இடிபாடுகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளமையானது, ஏனைய புராதன நகர்களை விடவும் இந்நகர்கள் நாகரிகத்தை நோக்கி விருத்தியடைந்துள்ளமையைப் பறைசாற்றுகின்றது.

கி.மு.1500 முதல் இந்தியாவில் குடியிருப்புக்களை மையமாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு 16 தலைநகரங்கள் தோற்றம் பெற்றுள்ளன. இனக்குழுக்கள் முறையிலிருந்த ஆட்சிமுறை அரசாட்சியாக மாற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## சீனத்து நகர் நெற்பயிர்ச் செய்கையும் வைத்தியத்துறையும்

அடுத்து வடமத்திய சீனாவில் ஊற்றெடுத்து நீண்டதூரம் கிழக்காகப் பாயும் 'ஹுவாங்கோ'ஞ நதியின் அடிப்பாகத்தில் நிலவிய சீன நகரைக் குறிப்பிடலாம். புராதன நகர்களுக்கான அனைத்துப் பண்புகளும் இந்நகரிலும் அமைந்திருந்தபோதிலும் நெல் பயிரிடப்பட்டுள்ள நகராக இது கருதப்படுகின்றது.

புராதன சீன நகரில் நிறந்தீட்டப்பட்ட பீங்கான் பொருட்கள், வெண்கலப் பொருட்கள், மட்பாண்டங்கள், சிதைவடையாமல் பாதிக்கப்பட்ட மம்மிகள் என்பன இங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திறந்து மூடப்பட்டுள்ள மம்மி ஒன்றின் மூலமாக இங்கு வைத்தியத்துறை மேம்பாடடைந்திருந்தமை


நைல்நதி


மெசப்பத்தேமியா

# புராதன

# கள்

அறியப்படுவதோடு, சத்திர சிகிச்சை முறை நிலவியமைக்கான சான்றுகளும் உள்ளன. இந்நகரை மையமாகக்கொண்டு மன்னராட்சி முறையே நிலவி வந்துள்ளது.

## ஏதென்ஸ் ஒலிம்பிக்கின் தாயகம் திராட்சை, ஒலிவ் பயிர்ச்செய்கை

உலகில் கி.மு.1000 அளவில் கிரேக்கத்தில் உருவான நகராக ஏதென்ஸ் அறியப்படுகின்றது. இது அயோனியன் ஈஜியன் கடல்களுக்கிடையே அமைந்த மலைசார்ந்த நகராகும். மத்திய ஆசியாவின் 'ஸ்டொப்ஸ்' புல்வெளியிலிருந்து வந்த ஆரிய இனத்தவர்களே, இங்கு முதலில் குடியேறியுள்ளனர். இவர்களால் கிராமங்களாக ஆரம்பிக்கப்பட்ட குடியிருப்புகள் படிப்படியாக நகரங்களாக மாறியுள்ளன. இங்கிருந்த நகர அரசுகள் இந்நகரங்களை மையமாகக்கொண்டே உருவாக்கப்பட்டுள்ளன.

கிரேக்கத்தின் நகர அரசுகளின் தலைநகர் அக்ரோபொலிஸ் என்றழைக்கப்பட்டது. ஒலிம்பிக் விளையாட்டு கிரேக்கத்திலிருந்தே ஆரம்பமாகியுள்ளது. அத்துடன், ஜனநாயகத்தின் பிறப்பிடமாகவும் ஏதென்ஸ் கொள்ளப்படுகின்றது.

புராதன எகிப்திய ஆபரணம்





இங்கும் உலகில் ஆரம்பகாலத்தில் உருவான நகரங்களுக்கான பொதுப் பண்புகளில் ஒன்றான பயிர்ச் செய்கையே பிரதான பொருளாதார மூலாதாரமாகக் கொள்ளப்பட்ட போதிலும் திராட்சையும், ஒலிவ்வும் இங்கு மேலதிகமாகப் பயிரிடப்பட்டுள்ளன. வெங்காயம், மரக்கறிகள், மீன், பார்ளிக்கஞ்சி என்பனவும் இங்கு உணவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஏதென்ஸ் நகர் துறைமுக நகராக இருந்தமையால் இங்கு வர்த்தகம் மேம்பாடடைந்திருந்த போதிலும் சுதேசிகள் வர்த்தகத் தொழிலைத் தாழ்வாக மதித்தமையால் அந்நியர்களே, இங்கு வர்த்தகத்துறையில் ஈடுபட்டுவந்துள்ளனர். கிரேக்கரான தோலமி உலகப் படம் வரைவதற்கு அந்நிய வர்த்தகர்களின் ஆதாரங்களையே பயன்படுத்தியுள்ளார். தத்துவஞானிகளான சோக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டல் என்போரும் புகழ்பெற்ற புராதன விஞ்ஞானிகளாகக் கருதப்படும் ஹிப்போகிரடிஸ், ஆக்கிமிடிஸ், பைதகரஸ் போன்றோரும் கிரேக்கத்தவர்களே. போரை மையமாகக் கொண்ட காவியங்களையும், நூல்களையும் உலகிற்களித்த ஹோமர், ஹெஸியட், ஹோரோட்டஸ் என்போரும் கிரேக்கத்து நகர்களில் பிறந்தவர்களே. பாரசீகத்தை தாக்கும் எண்ணத்தில் கிரேக்கத்தவர்களை ஒன்றுதிரட்டக் கனவுகண்டு, இறுதியில் கொலைசெய்யப்பட்ட பிளிப் மன்னனின் மகனான மகா அலெக்ஸாந்தரும் கிரேக்கத்து நகரத்தில் பிறந்தவரே. இவர் கிரேக்க ஆதிக்கம், ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் பரவக் காரணமாக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கிரேக்கத்து நகர்களில் சுண்ணாம்புக் கற்களாலும், பளிங்குக்கற்களாலும் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களும், மாடிவீடுகளும், ஆலயங்களும், சிலைகளும், பாதுகாப்பான கோட்டைகளும் காணப்பட்டுள்ளன. பாதீனன் ஆலயம், பரிதிவட்டம் வீசுபவனின் சிலை போன்றனவும் இங்கு கண்டுபிடிக்கப்பட்டவையாகும்.

## ரோம் சட்டத்தின் உருவாக்கம்

உலகில் அடுத்த புராதன நகர்களில் கி.மு.753 அளவில் இத்தாலியில் உருவான ரோம் நகரைக் குறிப்பிடமுடியும். இதன் தெற்கு, மேற்கு எல்லைகளாக மத்தியதரைக் கடல் அமைந்துள்ளது. வடக்கு எல்லையாக 'அல்ப்ஸ்' மலைத் தொடரும், கிழக்கு எல்லையாக எட்ரியாட்டிக் கடலும் உள்ளன. ஆரியக் குடிகளைக்கொண்டு


புராதன கிரேக்க ஆலயம்

உருவானதே ரோம் நகரம். இவர்கள் 'இலத்தீனியர்கள்' என்றழைக்கப்பட்டனர். ஆரம்பகாலத்தில் ரோம் நகர் கோத்திர ஆட்சி முறையில் உருவாக்கப்பட்ட போதிலும் பின்னர் மன்னராட்சியே அங்கும் நிலவியுள்ளது. கி.மு.509 அளவில் இங்கு குழு ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. நகரைச் சுற்றிய பிரதேசங்களை மாத்திரம் தன்னகத்தே கொண்டிருந்த ரோம் நகர், கி.மு.270 முதல் முழு இத்தாலி நாட்டையும் ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து ஆட்சிசெய்தது. பின்னர் ஸ்பானியா, பிரித்தானியா மற்றும் வட


மொஹஞ்சதாரோ நாகரிகம்

ஆபிரிக்காவின் பெரும் பிரதேசங்களையும் தமதாக்கிக்கொண்டது.

கீர்த்திமிக்க மன்னன் ஜுலியஸ் சீஸர், ரோமப்பேரரசின் பொற்காலத்தை உருவாக்கிய ஒகஸ்டஸ் ஸீஸர், ரோமை ஆண்ட பிற்போக்கு மன்னன் நீரோ, நவீன ஆடைமுறை ஒன்றை ரோம் நகருக்கு அறிமுகப்படுத்திய கெரகல்லர், கொன்ஸ்தாந்திநோபிலைத் தலைநகராக்கிய மன்னன் மகாகொன்ஸ்தாந்தைன் போன்றோரின் பிறப்பிடம் ரோம் நகராகும். இந்நகரத்தவர்கள் உலகிற்களித்த பெரும் பொக்கிஷம் ரோமானியச் சட்டமுறையாகும்.

அனுராதபுரக் காலத்தில் இலங்கை ரோம் நகருடன் வர்த்தகத் தொடர்புகள் கொண்டு தமது முத்து, மாணிக்கம் போன்றவற்றை ரோமுக்கு அனுப்பி, அங்கிருந்து செம்பவளங்கள் பெறப்பட்டுள்ளமைக்கான வரலாற்றுச் சான்றுகளை 'மகாவம்சம்' குறிப்பிடுகின்றது.

ரோம் நகரத்தவர் பட்டு, வாசனைத்திரவியங்கள், அழகு சாதனங்கள், பீங்கான் வகைகள், மருந்துகள் போன்றவற்றை சீனாவிலிருந்தே பெற்றுக்கொண்டுள்ளனர். இந்தியா, சீனா, இலங்கையிலிருந்து பெறப்பட்டவற்றை ரோமர்கள் நகரங்களுக்கு அனுப்பி வர்த்தகம் செய்துள்ளனர்.

ரோம் நகர் அக்காலத்து வைத்திய மத்திய நிலையமாக விளங்கி வந்துள்ளது. ரோமின் புகழ்பெற்ற வைத்தியராக, 500 மேற்பட்ட மருத்துவ நூல்களை உலகிற்களித்த கலன் கருதப்படுகின்றார். ரோம் நகர் உலகிற்கு அறிமுகப்படுத்திய ஜுலியஸ் கலண்டர் இன்றும் பாவனையில் உள்ளது. வில் வடிவான கட்டடங்கள் ரோம் நகரிலேயே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**ஐ.ஏ.ஸத்தார்**


புராதன இத்தாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசு:** பல கட்சி ஜனநாயக அரசு.
**சுதந்திரம்:** ஐக்கிய ராச்சியத்திடமிருந்து சுதந்திரப் பிரகடனம், 1964 ஜூலை மாதம் 6ஆம் திகதி.
**அதிபர்** (2004): பிங்கு வா முதாரிக்கா.
**உப அதிபர்:** ஜோய்ஸ் பண்டா.
**தேசிய பெயர்:** (ச்)சாலோ (ச்)சா மலாவி (Republic of Malawi).
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய ஜூலை 6.




# மலாவி

## புவியியல்

முன்னர் நியாஸிலாந்து என அழைக்கப்பட்ட முற்றிலும் நிலப்பரப்பால் சூழப்பட்ட மலாவியின் கிழக்கு எல்லையில் மலாவி ஏரி பரந்துள்ளது. இதன் சிறிய பகுதி மொசெம்பிக்கில் உள்ளது. மலாவி நாட்டின் தெற்கில் மொசெம்பிக், மேற்கில் செம்பியா, வடக்கு மற்றும் கிழக்கில் தன்சானியா ஆகிய நாடுகள் எல்லைகளாக அமைந்துள்ளன. வடக்கு-தெற்காக உயர் மலைகளும் உயர் மேட்டுநிலங்களும் காணப்படுகின்றன. நாட்டின் முக்கிய நதியாகிய ஷியர் நதி, தென் எல்லையில் மலாவி ஏரிக் கருகில் செம்பஸி நதியுடன் இணைகிறது.

**மொத்தப்பரப்பு:** 45,745 ச.மைல் (118,480 ச.கி.மீ);
**நிலப்பரப்பு:** 36,324 ச.மைல் (94,079ச.கி.மீ).
**மக்கள் தொகை** (2010): 15,447,500.
**தலைநகரம்:** லிலோங்வே; **பெரிய நகரம்:** பிளேன்டயர்.
**நாணயம்:** க்வேச்சா.
**மொழிகள்:** (ச்)சிச்சீவா - 7.2% (உத்தியோகபூர்வ மொழி, (ச்)சின்யாஞ்சா -12.8%, (ச்)சியாயோ - 10.1%, (ச்)சிட்டும்புக்கா - 9.5%,(ச்)சினே - 2.7%,(ச்)சிலோம்வே - 2.4%, (ச்)சிட்டோங்கா - 1.7%, ஏனையவை - 3.6%.



**இனக்குழுக்கள்:**(ச்)சீவா, யாஞ்சா, ட்டும்புக்கா, . யாயோ, சேன,லோம்வே, டொங்கா, கோனி, கோண்டே ஆசிய மற்றும் ஐரோப்பியர்.

**மதங்கள்:** கிறிஸ்தவம் 80%, இஸ்லாம் 13%, மதங்களைப் பின்பற்றதோர் 4%.

**தேசிய கீதம்**
Mlungu dalissani Malawi,
Mumsunge m'mtendere,
Gonjetsni adani onse,
Njala, nthenda, nsanfje..என ஆரம்பமாகின்றது.

**எழுத்தறிவு** (2003): 63%.
**இணையத்தளக் குறியீடு:** .mw
**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** +265








## வரலாறு

கி.மு.8000 - 2000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலங்களிலிருந்தே இங்கு குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளதாகக் கருதப்படுகின்றது. ஒரு காலத்தில் பல முக்கிய பேரரசுகள் தமது ராச்சியங்களை மலாவியில் நிறுவி இருந்தன. 1850, 1860களில் டேவிட் லிவிங்ஸ்டன் என்ற நாடுகாண் பயணி முதன்முதலாக மலாவியை வந்தடைந்தார். தொடர்ந்து, பிரித்தானியா 1891 இல் இந்த நாட்டைக் கைப்பற்றி, நியாஸிலாந்து என்ற பெயரில் தனது குடியேற்றத்துடன் இணைத்துக் கொண்டது. 1964 ஜூலை 6ஆம் திகதி பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. 1966 இல் குடியரசானது. அதிபர் ஹேஸ்டிங்ஸ் பல்டாவின் 30 வருட ஏகாதிபத்திய ஆட்சியைத் தொடர்ந்து, 1994 முதல் பல கட்சி ஜனநாயக ஆட்சி மலர்ந்தது.


லிலோங்வே நகரின் ஒரு பகுதி

## கலாசாரம்


மலாவி ஏரி

பல்வேறுபட்ட வித்தியாசமான கலாசாரங்களின் இருப்பிடம்தான் மலாவி. (ச்)சிடென்ஜி எனப்படும் ஆடை அணிகலன்கள் மலாவி பெண்கள் மத்தியில் மிகப் பிரபல்யம் வாய்ந்தது. அரிசி, கிழங்கு வகைகள் என்பன அவர்களின் உணவில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மலாவியர்களின் கலாசாரத்தில் நடனம் முக்கிய இடத்தை வகிக்கின்றது. பாரம்பரிய இசை, நடனம் என்பன அவர்களின் முக்கிய கொண்டாட்டங்களில் இடம்பெறும். தவிர, மரவேலைப்பாடுகளிலும் அந்நாட்டினர் கைதேர்ந்தவர்களாவர்.

## காலநிலை

தரைத்தோற்ற வேறுபாடுகளைப் பொறுத்து வெப்பமும் குளிரும் வெவ்வேறு இடங்களில் மாறுபட்ட அளவுகளில் நிலவுகின்றன. மே முதல் ஜூலை வரை நாட்டில் மாரிகாலமாகும். நொவெம்பர் முதல் மார்ச் வரை அதிக மழையும் பொழியும்.







## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2000): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 45,000, செல்லிடத் தொலைபேசிகள்: 49,000. **வானொலி நிலையங்கள்** (2001):AM 9, Fm 5, SW 2, **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (2001): 1, **இணையத்தள வழங்குனர்கள்** (2002): 3, இணையத்தளப் பாவனையாளர்கள்: 35,000.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2002): மொத்தம் 794 கிலோ மீற்றர். **பெருந்தெருக்கள்** (1999): மொத்தம் 28,400 கி.மீற்றர் (இதில் செப்பனிடப்பட்டவை - 5,254 கி.மீ, செப்பனிடப்படாதவை-23,146 கி.மீ),
**நீர்வழிப்போக்குவரத்து:** 144 கி.மீ. (மலாவி ஏரி மற்றும் ஷியர் நதிகளில் இப்போக்குவரத்து நடைபெறுகின்றது).
**துறையும் துறைமுகமும்:** (ச்)சிபோகா, மங்கி குடா, நிக்காட்டா குடா, (ச்)சிலும்பா. **விமானநிலையங்கள்:** 43.

## பொருளாதாரம்


தேசிய இலச்சினை


**விவசாயம் (பயிர்ச்செய்கை நிலம் 20 வீதம்) மற்றும் விலங்கு வேளாண்மை:** புகையிலை, கரும்பு, பருத்தி, தேயிலை, கிழங்கு வகை, தானியங்கள், மாடுகள், ஆடுகள். **தொழிலாளர் தொகை** (2001): 4.5 மில்லியன்.
**கைத்தொழில்கள்:** புகையிலை, தேயிலை, சீனி, சீமெந்து, நுகர்வுப் பொருட்கள். **இயற்கை வளங்கள்:** சுண்ணக்கல், பயிர்ச்செய்கை நிலம், நீர்மின்வலு, யுரேனியம், நிலக்கரி, பொக்ஸிட்.
**ஏற்றுமதிகள்:** புகையிலை, தேயிலை, சீனி, பருத்தி, மர உற்பத்திப் பொருட்கள், புடவை.
**இறக்குமதிகள்:** உணவுப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள், போக்குவரத்து சாதனங்களும் உதிரிப் பாகங்களும்.
**முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): தென்னாபிரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, எகிப்து, ஐக்கிய ராச்சியம், மொசெம்பிக், இந்தியா, சிம்பாப்வே, செம்பியா,தன்சானியா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

- லிலோங்வே இயற்கை சரணாலயம்
- கெபிடல் ஹில்
- கேப் மெக்லியர் மீன்பிடிக் கிராமம்
- முலான்ஜே மலை
- சொம்பா மேட்டு நிலம்
- மலாவி ஏரி தேசிய வனவிலங்கியல் பூங்கா
- கசுங்கு தேசிய வனவிலங்கியல் பூங்கா
- லெங்வே தேசிய வனவிலங்கியல் பூங்கா.

சொம்பா மேட்டு நிலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஓய்வூதியம் இது ஆங்கிலத்தில் பென்ஷன் என்றும், சிங்களத்தில் விஷ்ராம வெட்டுப் என்றும் அழைக்கப் படுகின்றது. அவ்வாறே,ஊழியர் சேமலாப நிதியம் ஆங்கிலத்தில் எம்ப்லோயீஸ் புரோவிடன்ட் ஃபன்ட் (ஈ.பி.எஃப்.) எனவும், சிங்களத்தில் அர்த்த சாதக அரமுதல் எனவும் கூறப்படுகின்றது. அரச ஊழியருக்கு 60 வயதானதும் ஓய்வோடு ஓய்வூதியமும் கிடைக்கும். அதன்படி, அவர் உயிருள்ளவரை சம்பளத்தில் பாதியை மாதாந்தம் பெறுவார்.

# ஊழியர் சேமலாப நிதியம் உருவானது எப்படி?





எனினும், தனியார் நிறுவனங்களில் தொழில் புரிவோருக்கு ஓய்வூதியம் கிடைப்பதில்லை.அவர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியே கிடைக்கின்றது. அதன்படி தொழில்வழங்குனர் தொழிலாளிக்காக 12சதவீதம் வைப்பிலிடுகையில் தொழிலாளியின் சம்பளத்தில் 8 சதவீதம் கழிக்கப்பட்டு, வைப்பில் இடப்படும் தொகையுடன் சேர்க்கப்படுகின்றது. ஆக 20 சதவீதமாகச் சேரும் இந்த நிதியை தொழிலாளி ஓய்வுபெறும்போது பெற்றுக்கொள்ளலாம்.

ஊழியர் சேமலாப நிதி இல்லாத ஆரம்ப காலகட்டத்தில் தனியார் தொழிலாளி ஓய்வுபெறும்போது, வெறுங் கையுடனேயே வீடுசெல்ல வேண்டியிருந்தது. அதனால் நோயோ, விபத்தோ, வறுமையோ ஏற்பட்டால் அவருக்கு எந்த நிவாரணமும் இல்லாமல் இருந்தது. ஓய்வுபெற்ற பின்னர் சிறுகைத்தொழில் செய்வதாயினும் முதலீடு இருக்கவில்லை. தற்போது அந்த நிலைமை மாறி விட்டது.

**இனி ஊழியர் சேமலாப நிதியம் எப்படி உருவாகியதென்று பார்ப்போம்:**

1946 ஆம் ஆண்டில் சோல்பரி யாப்பை எழுதிய சேர். ஐவர் ஜெனிங்ஸ் சமூக சேவைக்கமிஷன் சபைத்தலைவராக இருக்கையில் தொழிலாளர் நலனுக்காக மூன்று சிபாரிசுகளைச் செய்திருந்தார். அவை வருமாறு

1. தேசிய ஊழியர் சேமலாப நிதியம்.
2. தொழில் இல்லாதோருக்கான உதவி.
3. சுகாதாரக் காப்புறுதியும் நோயாளருக்கான உதவியும்.

இந்த மூன்று சிபாரிசுகளும் ஏழு வருடங்களாக கிடப்பில் போடப்பட்ட பின், 1953 ஆம் ஆண்டு கவனத்தில் எடுக்கப்பட்டது. எனினும், தோட்டத் தொழிலாளருக்கும் இதனைக் கொடுக்க வேண்டிவரும் என்பதால் அப்போதும் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை. முடிவில் தேயிலைத் தொழிலாளரின் உரிமைகள் தேயிலை ஏற்றுமதியாளர்களிடம் இருந்து தொழிலாளர்களுக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டது. 1947 ஆம் ஆண்டு அரச ஊழியரின் நாடுதழுவிய வேலைநிறுத்தத்தின்போது தொழிற்சங்கத் தலைவர் டி.பி. இலங்கரத்ன தமது தொழிலை இழந்தார். அன்று முதல் அவர் தனது போராட்டத்தைத் தொடர்ந்தார்.

எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க 1951 ஆம் ஆண்டு புதிய ஆட்சி அமைத்ததையடுத்து டி.பி. இலங்கரத்ன தொழிலமைச்சரானதுடன் அமைச்சரவை ஊழியர் சேமலாப நிதியை ஏற்குமாறும் செய்தார். அவர் அமைச்சராக இருந்த நிலையிலும் தொழிற்சங்கத் தலைமையைக் கைவிடவில்லை.





எனினும் ,எடுத்த எடுப்பில் தனியாளாக நின்று தனது இலட்சியத்தை நிறைவேற்றுவது சிரமமாக இருந்தது. இந்நிலையிலேயே இன்னொரு தொழிற்சங்கத் தலைவரான எம்.ஜி.மெண்டிஸின் ஒத்துழைப்பை கோரிப் பெற்றுக்கொண்டார்.

தொழிற்சங்கத் தலைவரான ஓர் அமைச்சரும் அவருக்குத் துணையாக இன்னொரு தொழிற்சங்கத் தலைவரும் திட்டமிட்டு இயங்கியதால் தனியார் நிறுவன உரிமையாளர்களால் எதுவும் செய்யமுடியவில்லை.அவர்கள் தொடர் வேலைநிறுத்தங்கள் மூலம் இணங்கவைக்கப்பட்டனர். 1956 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நாடு தழுவிய வேலைநிறுத்தம் நிகழ்ந்ததால் தேயிலையின் இலாபத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. அப்போது பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஐ.நா. சபைக்குச் சென்றுவரும் வழியில் லண்டனில் இருந்தார். ஆட்சிப் பொறுப்பு சி.பி.டி.சில்வாவிடம் இருந்தது. கூடவே 15 அமைச்சர்கள் இருந்த போதிலும் அவரோடு இரண்டு அமைச்சர்கள் மாத்திரமே அவசரமாகக்கூடிப்பேசினர். நிதியமைச்சர் ஸ்டென்லி சொய்சாவும் நீதியமைச்சர் எம்.டபிள்யூ எச்.த.சில்வாவுமே அவ்விருவராவர்.

கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டமடைவதைத் தடுக்கும் முகமாக வேறு வழியின்றி சி.பி.டி.சில்வா தேயிலை ஏற்றுமதிக் கம்பனியான புரூக்பொன்ட் நிறுவனத்தின் தலைவரையும், எம்.ஜி.மெண்டிஸையும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவைத்தார். இதன் பின்னணியில் டி.பி.இலங்கரத்ன எம்.ஜி. மெண்டிஸுக்குத் துணைநின்றார். முடிவில் புரூக்பொன்ட் கம்பனியின் தொழிலாளர்கள் ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக்கொண்டனர்.

பின்னர் 1957 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் டி.பி.இலங்கரத்ன ஊழியர் சேமலாப நிதிக்கான அறிக்கையை தொழிலமைச்சர் எனும் ரீதியில் நிதியமைச்சிடம் சமர்ப்பித்தார். முடிவில் ஊழியர் சேமலாப நிதி சட்டமூலம் 1958 ஆம் ஆண்டு பெப்ரவரி 13 ஆம் திகதி தொழில் வீடமைப்பு சமூக சேவைகள் அமைச்சரான டி.பி. இலங்கரத்னவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இதற்கு டி.பி.இலங்கரத்ன மற்றும் எம்.ஜி.மெண்டிஸ் ஆகியோரே காரணமாக இருந்தனர் என்பதே உண்மையாகும்.

**- ஏ.ஜே.எம்.நிழாம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தமிழ் (கடந்த வாரத் தொடர்ச்சி)

பெயர்: ........................................ நேரம்: 1மணி 30 நிமிடங்கள்

★ ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

30. சேவல் அதிகாலையில் கூவியது.

........................................................................................

31. நான் கோயிலுக்குச் சென்றேன்.

........................................................................................

★ இறந்தகால வாக்கியங்களை நிகழ்கால வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

32. சாந்தி பத்திரிகை வாசித்தாள்.

........................................................................................

33. முயல் துள்ளித் துள்ளி ஓடியது.

........................................................................................

★ பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு வாக்கியம் அமைக்க.

34. கடிகாரம்: ........................................................................

35. செய்தித்தாள்: ....................................................................

★ 'உழவுத் தொழில்' பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தபட்சம் நான்கு சொற்கள் இடம்பெறுதல் வேண்டும். எழுவாய், பயனிலை திருத்தமாக அமைதல் வேண்டும்.

36. ........................................................................................

........................................................................................

37. ........................................................................................

........................................................................................

38. ........................................................................................

........................................................................................

39. ........................................................................................

........................................................................................

40. ........................................................................................

........................................................................................

## வினாத்தாள் I இன் விடைகள்

(ஒக்டோபர் 13, 20 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

| | | | | |
|---|---|---|---|---|
| (01) 1 | (02) 2 | (03) 3 | (04) 2 | (05) 2 |
| (06) 3 | (07) 1 | (08) 3 | (09) 3 | (10) 3 |
| (11) 3 | (12) 1 | (13) 1 | (14) 3 | (15) 1 |
| (16) 3 | (17) 2 | (18) 2 | (19) 3 | (20) 1 |
| (21) 2 | (22) 3 | (23) 1 | (24) 3 | (25) 2 |
| (26) 2 | (27) 2 | (28) 2 | (29) 3 | (30) 3 |
| (31) 2 | (32) 2 | (33) 3 | (34) 2 | (35) 2 |
| (36) 1 | (37) 3 | (38) 2 | (39) 2 | (40) 1 |

## தமிழ் - விடைகள்

(ஒக்டோபர் 20, 27 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

01. வீட்டில் 02. ஆடு, மாடு மேய்ந்திடாமல்
03. களைகளை 04. புவி நெகிழும்படி
05. பூக்களைக் கண்டு களிப்பதால் 06. மலர்கள்
07. (3) 08. (3) 09. (4) 10. (2)
11. (2) 12. (1) 13. (3) 14. (1)
15. குமாரும் லவனும் கடற்கரை மணலில் விளையாடினார்கள்.
16. பெரியவரே! உங்களுக்கு என்ன வேண்டும்?
17. கனிகள் 18. நண்பன் 19. செலவு 20. தாழ்வு
21. உழத்தி 22. சீமாட்டி/சீமானி 23. பாற்சோறு 24. முட்செடி
25. கண்+நீர் 26. வயல்+கரை
27. நாம் நாளையே அறுவடையைத் தொடங்குவோம்.
28. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.
29. விளையும் பயிரை முளையிலே தெரியும்.
30. சேவல்கள் அதிகாலையில் கூவின.
31. நாங்கள் கோயிலுக்குச் சென்றோம்.
32. சாந்தி பத்திரிகை வாசிக்கின்றாள்.
33. முயல் துள்ளித்துள்ளி ஓடுகின்றது.
34. நான் கடிகாரத்தின் உதவியுடன் அதிகாலையில் எழும்புவேன்.
35. நான் ஒவ்வொரு நாளும் செய்தித்தாள் வாசிப்பேன்.
36. ✱ பொருத்தமான ஆறு வாக்கியங்கள்.

# நுளம்பு, மனிதனைக் கடிப்பது ஏன்?



நுளம்புகள் குறிப்பாக மனிதர்களையே அதிகம் கடிக்கின்றன. நுளம்புகள் மனிதர் களை விரும்பிக் கடிப்பது ஏன்? என்பது குறித்து கெலிஃபோர்னியா பல்கலைக்கழக பூச்சியியல் பற்றிய ஆய்வுக்குழு ஆய்வொன்றில் ஈடுபட்டது.

இந்த ஆய்வினை அடுத்து, நமது உடல் வாசனையே நுளம்புகளை நம்மை நோக்கி ஈர்க்கின்றது என்பது தெரியவந்துள்ளது. அதாவது, நமது குருதியில் கலந்துள்ள சில ரசாயனங்களே நுளம்பின் விருப்ப உணவாக உள்ளது. குறிப்பிட்ட இந்த ரசாயனங்களே அவற்றுக்கு அழைப்பு விடுக்கின்றன. அதன்படி, நுளம்பின் தலைப்பாகத்தில் உள்ள குருதி உறிஞ்சும் குழாய்தான் அவற்றுக்கு மனிதர்களின் வாசனையை அறியும் உறுப்பாக செயற்படுகிறது. ஏனைய நுளம்புகளைவிட 'கியூலெக்ஸ்' இன நுளம்புகளுக்கே இந்த உறுப்பு சிறப்பான அளவில் வளர்ச்சி அடைந்திருக் கின்றதாம்.

# தாவரங்களின் தோற்றம்



உலகில் தாவரங்கள் முதன்முதலில் எப்போது தோன்றின? என்று நீங்கள் சிந்தித்திருக்கின்றீர்களா? புவியியல் காலவரையறையின்படி, தாவரங்கள் 'ஜுராஸிக்' என்ற காலப்பகுதியில்தான் தோன்றி யிருக்கின்றன. அதாவது, 157 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தான் தாவரவகைகள் தோன்றிய தாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

# COMPUTER எனப் பெயர் வந்ததெப்படி?



புழக்கத்தில் உள்ள சில ஆங்கிலச் சொற்களுக்கு பெயர் வந்தது எப்படி? என்று ஆராய்ந்து பார்த்தால் அது வியப்பானதாகவே இருக்கும். உதாரணமாக, NEWS என்ற ஆங்கில வார்த்தையின் விரிவாக்கம் 'நான்கு திசைகளிலிருந்தும் வரும் செய்திகள்' என்பதா கும். நான்கு திசைகளினதும் பெயர்களின் முதலெழுத்துகளின் சேர்க்கையாகவே (North, East, West, South) NEWS வந்தது.

அதேபோல், COMPUTER என்ற சொல்லின் விரிவாக்கம் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? 'Commonly Operated Machine Particularly Used for Technological and Educational Research' என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குங் ஃபூ' கலையின் உன்னத நோக்கம்



**'குங் ஃபூ' (kung fu) என்பது ஆயுதம் இன்றி எதிரியைத் தாக்கும் ஒரு கலையாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே சீனாவில், தற்காப்பு வழிமுறையோடு கருணையே வடிவான பௌத்த மதத் துறவிகளினால் தோற்றுவிக்கப்பட்ட கலை என்றே குங் ஃபூ குறிப்பிடப்படுகின்றது.**







எதிரியை எதிர்ப்பதற்கும் தன்னைக் காத்துக்கொள்வதற்கும் பயன்படும் ஒரு கலையே குங் ஃபூ ஆகும். ஏனைய கலை அமைப்பிலிருந்து இது வேறுபடுவதால், இந்தக் கலையில் ஆயுதத்தைப் பயன்படுத்துவதில்லை. எதிரி, தன்னைக் காத்துக் கொள்கின்ற துணிவை ஏற்படுத்திக்கொள்ள முடியாதபடி, அடிகளாலோ, குத்துக்களாலோ, உதைகளாலோ எதிரியைத் திணறடிக்கும் தந்திரங்கள் இந்தக் கலையில் உள்ளன. இதன் நோக்கம் எதிரியைக் கொன்று விடுவதல்ல; எதிரியை செயலற்றுப் போகச் செய்து வெல்வதே.

குங் ஃபூ கலையின் விதிமுறைகளைக் கற்றிருப்பவர் மெலிந்து காணப்படினும், 110 கிலோ எடையுள்ள இரும்புக் குண்டைத் தூக்கி எறியக்கூடிய வலிமையைப் பெற்றிருப்பார். குங் ஃபூ கலைஞர், தம் விழிப்புணர்ச்சியின் அழுத்தப் புள்ளிகளையும் நரம்பு மண்டல மையங்களையும் நன்கு அறிந்திருப்பார். இந்த அழுத்தப் புள்ளியால் எளிதாகத் தாக்கும் நுட்பத்தையும் தெரிந்திருப்பார். அத்துடன், குங் ஃபூ கலைஞர்கள் அடி அல்லது உதையினால் சிலவேளைகளில் துடிக்கச் செய்கின்ற கலையையும் அறிந்திருப்பார்கள். நெஞ்சுக்குழி, கணுக்கால், மணிக்கட்டு எலும்புகள், மெல்லிய காதுப் பகுதியின் கீழ்ப் பகுதி, மேல் தோள் நரம்புகள் போன்றவை அத்தகைய சில முக்கியமான பகுதிகள் ஆகும்.

ஜூடோவைக் காட்டிலும் கராத்தே வேகமானது. கராத்தேயைக் காட்டிலும் குங் ஃபூ பயங்கரமானது. எனவே, குங் ஃபூ பயின்றவர் முறையாக அதனைப் பயன்படுத்த வேண்டும்.இதனை ஒருபொழுதும் தீய செயலுக்காகப் பயன்படுத்தக்கூடாது. ஆனால், உங்களை எதிர்க்கின்ற எதிரியின் தாக்குதலில் இருந்து உங்களைப் பாதுகாத்துக்கொள்ளப் பயன்படுத்தலாம்.

இக்கலையானது உடலின் நூற்றுக்கணக்கான தசைகளைப் பயன்படுத்திச் செய்கின்ற ஓர் உன்னதமான கலையாகும். உடலைத் தூய்மையாகவும் ஒத்துழைப்புத் தருகின்ற முறையில் விழிப்புணர்ச்சியுடன் சமமாக வைத்துக்கொள்வதற்கும் உடல் நேர்த்தியைப் பேணுவதற்கும் உதவுகின்ற பயன்மிக்க ஒரு தற்காப்புக் கலையாகவே குங் ஃபூ கருதப்படுகின்றது.

ஆபத்து வரும்போது கை-கால்களையும் முழங்கை-முழங்கால்களையும் வலிமை மிக்க ஆயுதங்களாக உடனடியாகவே மாற்றிக்கொள்ளும் உபாயம் குங்ஃபூ கலையில் உள்ளது. இது உயர்ந்த நம்பிக்கையையும் மனத்தெம்பையும் ஊட்டுகின்றது. இந்த வலிமையைப் பெற்றவர், சிறப்பான முறையில் தங்கள் உயிரையும் உடமைகளையும் பாதுகாத்துக்கொள்ளமுடிவதுடன், அச்சமின்றிய தைரியத்தையும் பெறுவார்.

குங் ஃபூ வீரக்கலையில் சிறந்த வீரனாகத் தேறுவதற்குப் பல ஆண்டுகள் தேவைப்படும். இக்கலையை உரிய முறையில் பயின்றவர் எதிர்த்துத் தாக்குபவர் பலசாலியாக இருப்பினும், ஆயுதங்களை வைத்திருந்தாலும் சில தந்திரங்களின் மூலம் தன்னைக் காத்துக்கொள்வார்.



மாஸ்டர் ஏ. ராஜா

# மழைக்காலத்தில்....



இலங்கையில் மே முதல் ஒக்டோபர் வரை நாட்டின் தென் மேல் பிரதேசமும் நொவெம்பர் இறுதி முதல் ஜனவரி வரை நாட்டின் வடகிழக்குப் பிரதேசமும் அதிக மழையைப் பெறுகின்றது.மழை, எம் அனைவருக்கும் அத்தியாவசியமானதாகும். விவசாய நடவடிக்கைகள், மின்உற்பத்தி, தாவரங்களின் இருப்பு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு மழை அவசியமாகின்றது. மழையினால் எமக்குப் பல நன்மைகள் கிடைத்தாலும், அது மனிதனுக்கு அச்சுறுத்தலாக மாறுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. அத்தகைய கேடு விளைவிக்கும் விடயமாக மழைக்காலத்தில் சில நோய்கள் பரவுவதைக் குறிப்பிடலாம். இந்த நோய்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்வது மிக அவசியமாகும்.

## நீரினால் பரவும் நோய்கள்

- வயிற்றோட்டம்
- வயிற்றுளைவு
- சீதபேதி
- பரவும் மஞ்சள் காமாலை
- கொலரா (வாந்திபேதி)

## நீரை அண்டி வாழும் நோய்க்காவிகளால் பரவும் நோய்கள்

- மலேரியா
- யானைக்கால் நோய்
- டெங்கு
- நெருப்புக் காய்ச்சல்
- தைபோயிற்றுக் காய்ச்சல்
- லெப்டொஸ்பைரோஸ் நோய்

## மழைக்காலத்தில் நீரைப் பயன்படுத்தும்போது...



- எந்நேரமும் கொதித்தாறிய நீரையே பருகுங்கள்.
- நீர் நிரப்பும் பாத்திரம் அல்லது கொள்கலன் சுத்தமாக இருக்க வேண்டும்.
- நீரைச் சேமித்து வைக்கும் கொள்கலன் அல்லது தாங்கிகளை எந்நேரமும் மூடி வையுங்கள்.
- தேக்கி வைத்துள்ள நீரை தேவைக்குப் பயன்படுத்தும்போது கைப்பிடியுள்ள ஒரே பாத்திரத்தைப் பயன்படுத்துங்கள்.
- பாடசாலைக்கு அல்லது மேலதிக வகுப்புகளுக்கு செல்லும்போது கொதித்தாறிய நீரை எடுத்துச் செல்லுங்கள்.
- வீட்டைவிட்டு வெளியேறிப் பயணங்களை மேற்கொள்ளும்போது, தாகம் ஏற்பட்டால் நீருக்குப் பதிலாக சுடச்சுட தேநீர், கோப்பி போன்றவற்றை அருந்துங்கள்.



## எப்பொழுதும் சூழலைச் சுத்தமாக வைத்திருங்கள்

- ஈக்கள் மற்றும் நுளம்புகள் பெருகுவதைத் தடுக்க குப்பைகூளங்களை எரித்து அல்லது குழிதோண்டிப் புதைத்துவிடுங்கள்.
- மழையினால் ஆங்காங்கே உள்ள குப்பைகூளங்கள், சிரட்டைகள் ஆகியனவற்றில் இருந்து பெருந்தொகையான ஈக்கள் , நுளம்புகள் பெருகுவதற்கான வாய்ப்பு உள்ளதால் பல்வேறு நோய்கள் பரவலாம். அதனால் டின், பிளாஸ்டிக் கொள்கலன்கள், இளநீர் கோம்பைகள், சிரட்டைகள் போன்றவற்றில் நீர் தேங்காதவாறு அவற்றை உடைத்து விடுங்கள் அல்லது புதைத்துவிடுங்கள்.

## மலசலகூடத்தைப் பயன்படுத்தும்போது...

- மலங்கழிப்பதற்கு மலசலகூடத்தையே பயன்படுத்துங்கள்.
- மலசலகூடத்தைப் பயன்படுத்திய பின்னர் உடனே சவர்க்காரமிட்டு கைகளைச் சுத்தமாகக் கழுவுங்கள்.
- மலசலகூடத்திற்குச் செல்லும்போது பாதணிகளை அணிந்து செல்லுங்கள்.

## உணவு தயாரிப்பின்போது...

- மரக்கறிகள், பழங்கள் மற்றும் கீரைவகைகளை நன்றாகக் கழுவி உணவாகக்கொள்ளுங்கள்.
- வீட்டுக்கு வாங்கிவரும் உணவுப் பொருட்களை எப்பொழுதும் மூடிவையுங்கள்
- அனைத்து சந்தர்ப்பங்களிலும் உணவு உட்கொள்ளும் உணவுத்தட்டு, கோப்பைகள் உள்ளிட்ட அனைத்துப் பாத்திரங்களையும் பயன்படுத்துவதற்கு முன்னர் அவற்றை நீரில் கழுவுங்கள்.
- உணவு சமைத்த பின்னர் அதை நீண்டநேரம் வைத்திருக்காமல் விரைவாக உண்ணுங்கள்.
- ஏற்கனவே சமைத்த உணவாயின் அதனை உணவுக்கு எடுப்பதற்கு முன்னர் நன்றாக சூடாக்கி உண்ண வேண்டும்.


- (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்

## உலக
## பணிய

**கடந்த இரு மாதங்களாக முழு உலகின் கவனமும் சிலி நாட்டின் பக்கமே திரும்பியிருந்தது. காரணம், சுமார் 700 மீற்றர் (துல்லியமாகக் கூறுவதாயின் 624 மீற்றர்) ஆழமான சுரங்கத்தில் மண் இடிந்து விழுந்ததால் அதற்குள் சிக்கியிருந்தவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமையாகும். இறுதியில் சுமார் 69 நாட்களின் பின்னர் சுரங்கப் பணியாளர்கள் வெற்றிகரமாக மீட்கப்பட்டனர் என்பதை ஊடகங்கள் வாயிலாக நீங்கள் அறிந்திருப்பீர்கள்**


மீட்புப் பணிக்குத் தயார்...

சுரங்கத்தொழில், பொதுவாகவே ஆபத்து நிறைந்த் ஒரு தொழிலாகவே காணப்படுகின்றது. ஆனால், இந்த சம்பவத்தைப் பொறுத்தவரையில்; அவர்களின் சளைக்காத முயற்சி, மீட்டெடுப்பதில் அந்நாட்டு ஜனாதிபதி உட்பட ஏனையோரின் கடமையுணர்வு, தாம் எப்படியும் காப்பாற்றப்படுவோம் என்று சுரங்கத்தினுள் சிக்கியவர்களின் நம்பிக்கை - பணியாளர்களைக் காப்பாற்றலாம் என்ற ஏனையவர்களின் நம்பிக்கை, மனிதாபிமானம் மற்றும் தைரியம் என மனித வாழ்க்கைக்குத் தேவையான பல்வேறு படிப்பினைகளை நாம் ஒருங்கே கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினை இதன்போது பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது என்றால் அதில் தவறில்லை.


சுரங்கத்தினுள் சிக்கியிருப்பவர்களுடன் வீடியோ மூலம் தொடர்புகொள்ளல்

### செம்பு ஏற்றுமதியில் முன்னணி

சிலி, தென் அமெரிக்காவில் உள்ள ஒரு நாடாகும். இந்நாட்டின் பிரதான ஜீவனோபாயத் தொழிலாக இருப்பது சுரங்கக் கைத்தொழிலாகும். செப்பு (செம்பு) எனும் உலோக அகழ்வில் உலகளாவிய ரீதியில் முதலிடம் வகிப்பது சிலி நாடாகும். அத்துடன், உலகிற்குத் தேவையான செம்பின் அளவில் 1/3 பங்கு சிலி நாட்டிலிருந்தே நிவர்த்தி செய்யப்படுகின்றது.

### நடந்தது என்ன?

கடந்த ஓகஸ்ட் 5 ஆம் திகதி சிலி நாட்டின் வடக்கே கொபியாபோ நகரின் மலைப்பிரதேசத்தில் அமைந்துள்ள சென் ஜோஸ் என்ற சுரங்கத்தில் சுமார் 400 மீற்றர் ஆழம்கொண்ட பகுதியில் எதிர்பாராத விதமாக மண் இடிந்து விழுந்ததனால் அப்பகுதி முழுமையாகவே மூடப்பட்டது. அப்போது,சுமார் 700 மீற்றர் அளவு ஆழத்தில் 33 சீரங்கத் தொழிலாளர்கள் செம்பு அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இந்த விபத்துக் காரணமாக, 33 தொழிலாளர்களும் வெளியே வரமுடியாமல் சுரங்கத்துக்குள் சிக்கிக் கொண்டனர். மீண்டும் ஓகஸ்ட் 8 ஆம் திகதி சுரங்கத்தினுள் இன்னுமோர் இடத்தில் மண் சரிவு இடம்பெற்றது. இதனை அடுத்து, வெளியில் இருந்தவர்கள் சுரங்கத்தினுள் இருந்த பணியாளர்கள் இறந்திருக்கலாம் என்றே கருதினர். ஆனால், குறித்த விபத்து நடக்கும்போது பணியாளர்கள் வேறோர் இடத்திலேயே இருந்தனர் என்பது வெளியே இருந்தவர்களுக்குத் தெரியாமல் இருந்தது.

இச்சம்பவம் நிகழும்போது ஈக்வடோருக்குச் சென்றிருந்த சிலி ஜனாதிபதி செபஸ்டியன் பினேரா உடனே நாடு திரும்பினார். யாரேனும் உயிருடன் இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தை அவர் எழுப்பினார்.


சுரங்கத்தினுள் சிக்கியுள்ள தனது பாட்டனாருக்கு கடிதம் எழுதும் சிறுமி


துளையினூடாக அத்தியாவசியப்பொருட்கள் அனுப்பப்படல்

தொழிலாளர்கள் சிக்குண்டிருந்த அந்த சுரங்கத்திற்கு அருகில் சுரங்கத்தின் கீழ்ப்பகுதி வரை 8 சென்ரிமீற்றர் அகலம்கொண்ட துளை ஒன்று இருந்தது. அதன்வழியே மீட்புப்பணியாளர்கள் சிறிய கெமரா ஒன்றை அனுப்பினர். அப்போதுதான் அந்த ஆச்சரியம் நிகழ்ந்தது...! கெமரா மேலே எடுக்கப்படும்போது அதனுடன் இணைத்தவாறு சிறிய துண்டுக்குறிப்பொன்றும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அதில் 'நாம் அனைவரும் பாதுகாப்பாக இருக்கின்றோம். இயன்றளவு விரைவில் எம்மை மீட்டெடுங்கள்' என்று எழுதப்பட்டிருந்தது. சுரங்கத்திற்குள் சிக்குண்டிருந்த தொழிலாளர்களாலேயே அது அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. ஆக, குறித்த விபத்தினால் சுரங்கத்தொழிலாளர்கள் எவரும் உயிரிழக்கவில்லை என்பது ஊர்ஜிதமாகியது.

இதனை அடுத்து, மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டதோடு, அப்பணிகள் ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டன. ப்ளேன் ஏ, ப்ளேன் பீ, ப்ளேன் சி என மூன்று திட்டங்களின்கீழ் நிலத்தைக் குடையும் பணிகள் ஆரம்பமாகின. இதன்படி, ஏற்கனவே அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்ட சிறிய துவாரம் 60 சென்ரிமீற்றர் விட்டமுடையவாறு துளையிடப்பட்டது. பின்னர், ப்ளேன் சி திட்டத்திற்கமைய, உலோகக்கூண்டொன்றை அனுப்பி தொழிலாளர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

### ஜனாதிபதியின் உறுதிமொழி

சுரங்கப்பணியாளர்களால் அனுப்பப்பட்ட துண்டுக்குறிப்பு அந்நாட்டு ஜனாதிபதி செபஸ்தியன் பினேராவால் அங்கு குழுமியிருந்த சுரங்கப் பணியாளர்களின் குடும்பத்தினர், உறவினர்களுக்கு வாசித்துக்காட்டப்பட்டது. இதைக் கேட்டு பதட்டத்துடனும் கவலையுடனும் இருந்த அனைவரும் மகிழ்ச்சியடைந்ததோடு, ஆபத்தில் சிக்கிய பணியாளர்களின் பாதுகாப்புக்காக பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர். சிலி ஜனாதிபதியோ எப்படியேனும் ஊழியர்களை மீட்டெடுப்பதாக அங்கிருந்தவர்களுக்கும் சிக்கியிருந்த பணியாளர்களுக்கும் உறுதியளித்திருந்தார். அவ்வாறே, சுரங்கத் தொழிலாளர்களை மீட்டெடுக்கும் பணி நிறைவடைந்ததை அடுத்து அங்கு உரையாற்றிய சிலி ஜனாதிபதி, இதுவோர் அற்புத நிகழ்வென்றும் அதற்கு பல்வேறு வழிகளில் உறுதுணை அளித்தவர்களுக்கு நன்றியையும் தெரிவித்தார்.

### நாஸாவின் உதவி

சுரங்கத்தில் சிக்கியிருக்கும் ஊழியர்களை உயிருடன் மீட்பதற்கு வெளிநாடுகளிலிருந்தும் உதவிகள் கிட்டின. சிறிய துளையை அகலமாக்கும்போது புவியின் உட்பகுதி தொடர்பான புகைப்படங்கள் மிகவும் அவசியமாக இருந்தன. ஏனெனில், ஒரு சிறிய தவறும் நிகழாதவண்ணம் நிலத்தைத் தோண்டும் பணிகள் அவதானமாக மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது. எனவே, நாஸாவின் நவீன செய்மதி உதவிகள் இதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டன. அத்துடன்; சிலியின் கடற்படை, சிலி மற்றும் அமெரிக்க பொறியியலாளர்களின் உதவிகளும் இதற்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

### மீட்கப்படும் வரை....

இந்த துளையினூடாக, சிக்கியிருந்த பணியாளர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்கள் உட்பட மருந்துவகைகளும் அனுப்பி வைக்கப்பட்டன. அத்துடன், சுரங்கத் தொழிலாளர்களை மீட்டெடுக்கும் வரை எந்தவொரு நிலையிலும் அவர்களின்


முதலாவதாக மீட்கப்பட்ட சுரங்கப் பணியாளரை ஜனாதிபதி கட்டித்தழுவுகின்றார்



முதலாவதாக மீட்கப்பட்டவர் வைத்தியபரிசோதனைக்குட்படுத்தப்பட்டபோது...


சிலி ஜனாதிபதி துண்டுக்குறிப்பை வாசிக்கும்போது...


பணியாளர்களின் பாதுகாப்புக்காக சமய வழிபாடுகள்


27ஆவதாக மீட்கப்பட்டவர் தனது மனைவியுடன் கால்பந்து விளையாடுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலிர்க்க வைத்த சிலி

## வரலாற்றில் மாபெரும் சாதனை; இடிந்து விழுந்த சுரங்கத்தில் சிக்கியிருந்த யாளர்கள் 69 நாட்களின் பின்னர் வெற்றிகரமாக மீட்கப்பட்டனர்

மனநிலை பாதிப்படையாமல் இருப்பதற்காக அறிவுரைகளை வழங்கவும் தைரியமூட்டக் கூடிய வகையிலான உரையாடல்களை மேற்கொள்வதிலும் அந்நாட்டு ஜனாதிபதி, பணியாளர்களின் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் மற்றும் நண்பர்கள், அதிகாரிகள், மருத்துவர்கள் என அனைவரும் ஈடுபட்டனர். 33 சுரங்கப்பணியாளர்களிடையே ஒரு பொலீவிய நாட்டுப் பிரஜையும் இருந்தார். பணியாளர்கள் தங்கள் உறவுகளுடன் வீடியோ மூலம் கதைப்பதற்கும் கடிதமூலம் தொடர்புகொள்ளவும் ஏற்பாடுகள் செய்துகொடுக்கப்பட்டன. இந்த வசதிகளும் அன்பான, ஆறுதலான வார்த்தைகளும் அவர்களுக்கு மிகுந்த தைரியத்தை வழங்கின.

### மீட்புக்காகப் பயன்படுத்தப்பட்ட உலோகக்கூண்டு

இதன்படி, இம்மாதம் 12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 11.15 மணியளவில் நவீனதொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வடிவமைக்கப்பட்ட உலோகக்கூண்டில் மீட்கும் பணியாளர் ஒருவர், வைத்தியர் ஒருவர், பொறியியலாளர் ஒருவர் என மூன்று பேர் சுரங்கத்தினுள் சென்றனர். இந்த உலோகக்கூண்டு 2.5 மீற்றர் நீளமும் 60சென்ரிமீற்றர் விட்டமும் கொண்டது. இது சிலி நாட்டு பொறியியலாளர்களால் நிர்மாணிக்கப்பட்டது. ஃபீனிக்ஸ் எனப் பெயரிடப்பட்ட இந்த உலோகக்கூண்டு, ஒரு மின்தூக்கி போன்று செயற்படும் வகையில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மீட்புப் பணியாளர் சுரங்கத்தினுள் சென்றதிலிருந்து இறுதி நபர் வெளியில் வரும்வரை இந்த உருளைக்கூண்டானது 74 தடவைகள் மேல்,கீழாக சென்று வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன்படி, இந்த மீட்புப் பணிக்காக சுமார் 23 மணித்தியாலங்கள் எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

### பணியாளர்கள் மீட்கப்படுவதற்கு முன்னர்

சுரங்கத்தில் சிக்குண்டவர்கள் வெளியில் வரும்போது அவர்களுக்கு ஒக்சிஜன் வாயுவை சுவாசிப்பதற்கான ஏற்பாடு



இரண்டாவதாக மீட்கப்பட்டவர் மகிழ்ச்சியில் குதூகலிக்கும் காட்சி

சுரங்கத்தில் சிக்கிய 33 பணியாளர்கள்



செய்யப்பட்டிருந்தது. அவர்களுக்கென்று விசேட ஆடைகளும் தயாரிக்கப்பட்டிருந்தன. அத்துடன், நீண்டநாட்களாக சூரிய ஒளியே கிடைக்காமல் அவர்கள் இருந்ததனால், திடீரென சூரியஒளி படும்போது அவர்களின் கண்களுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தலாம் என்று கருதப்பட்டது. அதற்கேற்ப, வெளியில் வரும் முன்னர் அணிந்து கொள்வதற்காக விசேட மூக்குக்கண்ணாடிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

வெளியில் வருவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்பு அவர்களுக்கு சக்திமிக்க பானம் அருந்தக் கொடுக்கப்பட்டது. தவிர, சவரம் செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்துகொடுக்கப்பட்டன. மேலும், தொடர்ந்தும் அவர்களுக்கு இறுதிவரை உளவள ஆலோசனைகள் வழங்கப்பட்டுக் கொண்டே இருந்தன.


முதல் சுரங்கப் பணியாளராக ஃப்ளொரன்ஸியோ அவாலொஸ் புதன்கிழமை புலரும் வேளையில் (ஓகஸ்ட் 13) அந்நாட்டு நேரப்படி அதிகாலை 12.11 மணியளவில் மீட்கப்பட்டார். இதனைக் கண்டு அங்கு கூடியிருந்தவர்கள் ஆனந்த மேலீட்டால் கைதட்டி ஆரவாரித்தனர். இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு தொழிலாளியும் படிப்படியாக மீட்கப்பட்டதோடு, இறுதியாக சுரங்கப்பணியாளர்களுக்குத் தலைமை வகித்த லுயிஸ் உர்சுவா மீட்கப்பட்டார். புதன்கிழமை நள்ளிரவு அந்நாட்டு நேரப்படி இரவு 11.30 மணிக்கு மீட்பு நடவடிக்கைக்காக உள்ளே சென்ற மானுவேல் கொன்சாலெஸ் வெளியே வந்ததை அடுத்து மீட்புப் பணிகள் முடிவுற்றதோடு, அவர் அனைவரினதும் பாராட்டைப் பெற்றார்.

மீட்கப்பட்ட தொழிலாளர்கள் வெளியே வந்ததும் தங்கள் உயிர் மீண்ட மகிழ்ச்சியிலும் தங்கள் உறவினர்களைப் பார்த்த மகிழ்ச்சியிலும் துள்ளிக்குதித்தனர். தங்கள் உறவுகளைக் கட்டித்தழுவினர். அதில் ஒருவர் சில நிமிடங்கள் கால்பந்தாடினார். இன்னுமொருவர் தாம் சிக்கியிருந்த சுரங்கத்திலிருந்து ஞாபகார்த்தமாக சில காரீயத்துண்டுகளை எடுத்து வந்தார். அவர்கள் ஒவ்வொருவரையும் அந்நாட்டு ஜனாதிபதி கட்டித்தழுவி தேற்றுவதற்குத் தவறவில்லை. அவ்வாறே, பணியாளர்கள் யாவரும் ஜனாதிபதிக்கு தம்மை இயன்றளவு விரைவில் மீட்டதற்கு நன்றியைத் தெரிவித்தனர்.

**- ஜீநு,**
**- அமீர். எச்.**

### 33 தொழிலாளர்களும் சுமார் 700 மீற்றர் ஆழத்திலேயே சிக்கியிருந்தனர்

**அவர்கள் 69 நாட்களின் பின்னர் வெற்றிகரமாக மீட்கப்பட்டனர்.**




### பணியாளர்கள் மீட்புப் பணி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக நாடாளுமன்றங்கள்



| | | |
|---|---|---|
| அமெரிக்கா | - | காங்கிரஸ் |
| ஆப்கானிஸ்தான் | - | ஷோரா |
| அவுஸ்திரேலியா | - | பெடரல் |
| இங்கிலாந்து | - | பிரபுக்கள் சபை/மக்கள் சபை |
| இஸ்ரேல் | - | நெஸட் |
| இந்தியா | - | லோக்சபா, ராஜ்ய சபா |
| ஐஸ்லாந்து | - | அல்திங்க |
| கனடா | - | மக்கள் சபை/செனட் |
| சீனா | - | தேசிய மக்கள் காங்கிரஸ் |
| சுவிட்சர்லாந்து | - | பெடரல் அசெம்பிளி |
| சுவீடன் | - | ரிக்ஸ்டாக் |
| டென்மார்க் | - | போல்கெட்டிவ் |
| தென்னாபிரிக்கா | - | ஹதஸ்ஆப் அசெம்பிளி |
| துருக்கி | - | கிராண்ட் நெஷனல் அசெம்பிளி |
| நோர்வே | - | ஸ்டோர்டிங் |
| நியூஸிலாந்து | - | பிரதிநிதிகள் சபை |
| பூட்டான் | - | சாங்டு |
| போலந்து | - | சீஜிம் |
| மலேசியா | - | தேவான் ரக்யத் மற்றும் நெகாரா |
| ரஷ்யா | - | சுப்ரீம் சோவியத் |
| ஜப்பான் | - | டயட் |

தொகுப்பு: அர்.சசிதரன்,
க/கந்தகட்டிய த.வித்., மடுல்கலை.

# வெப்ப அதிகரிப்பைத் தடுப்போம்



'நாட்டைச் சீராக்கும் முன் நம் வீட்டைச் சீராக்க முயல்வோம்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. இப்பழமொழிக்கு ஏற்ப சுற்றுச் சூழலில் வெப்ப அதிகரிப்பைப் பற்றியும் அதை எவ்வாறு குறைப்பது என்பது பற்றியும் உலகமே கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனினும், தனிப்பட்ட முறையில் இப்பிரச்சினையை சீராக்க நாம் என்ன செய்கிறோம் என்பதையும் சிந்திக்க வேண்டும். மேலும், வெப்ப அதிகரிப்பினால் உலகில் ஏற்படும் அபாயங்களைப் பற்றி நாள் தோறும் பத்திரிகைகளில் செய்திகள் வந்த வண்ணமே உள்ளன.




புவிவெப்ப அதிகரிப்பானது, காற்று மண்டலத்திலுள்ள கரியமில வாயு, மெதேன், நைட்ரஸ் ஒக்சைட் ஆகிய வாயுக்கள் அளவு மீறிப் போவதால் ஏற்படுகின்றது. மேற்குறிப்பிட்டபடி, வாகனங்கள் வெளியிடும் புகையிலுள்ள காபன் மோனாக்சைட், தொழிற்சாலைகளில் வெளியிடப்படும் மெதேன், நைட்ரஸ் ஒக்சைட் ஆகிய வாயுக்கள் காற்றில் கலந்து வாயுப்படலமாக மாறி, விண்வெளியில் வெளியிடப்படும் வெப்பத்தை வெளிச் செல்லவிடாமல் கிரகித்துக் கொள்வதால், புவியின் வெப்பம் அதிகரிக்கின்றது.

இதற்குரிய தீர்வு, பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது என்று நாம் அலட்சியமாக இருக்கக்கூடாது. நாம் ஒவ்வொருவரும் இப்புவி வெப்ப அதிகரிப்பைத் தடுக்க முயற்சி எடுக்க வேண்டும்.

அந்தவகையில் கீழ் கூறப்பட்டுள்ள ஒரு வாசகம் தனி மனிதர்களின் பொறுப்பைத் தெளிவாக விளக்குகிறது.

'உலகை சீர்திருத்தமுன் உன்னைச் சுற்றியுள்ள உலகை சீர் திருத்து!' என்பதே அது. இந்த வாசகத்தின்படியும் ஆரம்பத்தில் கூறப்பட்ட ஆங்கிலப் பழமொழிக்கு அமைவாகவும் நாம் அனைவரும் புவியின் வெப்ப அதிகரிப்பைக் குறைக்க முயல்வோம்!

ப.சாயீஸ்வரி,
தரம் - 7,
விக்னேஸ்வரா த.ம.வித்.,
பன்விலை.

# டெங்கு நுளம்பை ஒழிப்போம்




தற்போதைய காலகட்டத்தில் எமது நாட்டிற்குப் பெரும் சவாலாக இருப்பது 'டெங்கு' நோயாகும். இந்த நோய்க்கு மூலகாரணமாக, டெங்கு நுளம்புகள் காணப்படுகின்றன. இந்நோயினால் எமது நாட்டில் பாதிக்கப்பட்டோர், இறந்தோர் தொகை மிக அதிகம். இந்நிலை தொடர்ந்தால் மிக விரைவில் அது எமக்குப் பெரும் ஆபத்தை விளைவிக்கக்கூடும். எனவே, இக்கொடிய நோயிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

'வெள்ளம் வரும் முன் அணை கட்டு' எனும் பழமொழிக்கு அமைவாக, நோய் ஏற்பட்ட பின் அதற்குரிய சிகிச்சைகளைப் பெறுவதை விட, அந்நோய் எம்மைத் தாக்கும் முன் முற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது சாலச் சிறந்ததும் புத்திசாலித்தனமுமாகும். எனவே, இந்நோயைப் பரப்பும் நுளம்புகள் உருவாகாமல் தடுப்பதற்கு எமது வீட்டுச் சுற்றுப்புறச் சூழல், பாடசாலைச் சுற்றுப்புறச் சூழல் போன்றவற்றை மிகவும் சுத்தமாக வைத்திருப்பது அத்தியாவசியமாகும். நீர் தேங்கி நிற்கக்கூடிய யோகட் கப், சிரட்டை, மீன் டின், டயர் போன்ற பொருட்களை எரித்துவிடல் அல்லது புதைத்து விடுவதன் மூலம் டெங்கு நுளம்புகள் பரவாதிருக்கவும் நோய்த் தடுப்புக்கும் மிகச் சிறந்த வழிமுறைகளாகும்.

அதுமட்டுமன்றி, பொது மக்களுக்கும் மற்றும் எமது இளைய தலைமுறையினருக்கும் இந்த டெங்கு நோயினால் ஏற்படும் பேராபத்துக்களைப் பற்றி விளக்கி அவர்களை விழிப்புணர்வூட்டி 'டெங்கு நோய்' எனும் இக்கொடூரமான நோயை வெற்றிகொண்டு எதிர்காலத்தை ஒளிமயமாக்குவோம்!

பாத்திமா றிஸ்வானா ரவூஃப்,
கொடேகொட மு.வித்., ஹெம்மாதகம.

# எறும்புகளே!



கட்டெறும்பே கட்டெறும்பே
எங்கே போறீங்க?
கற்கண்டு இருக்குமிடம்
தேடிப் போறேங்க!

சிற்றெறும்பே சிற்றெறும்பே
எங்கே போறீங்க?
சீனிமிட்டாய் இருக்குமிடம்
தேடிப் போறேங்க!

சுள்ளெறும்பே சுள்ளெறும்பே
எங்கே போறீங்க?
சுவையான பண்டங்களை
சுவைக்கப் போறேங்க!

எறும்புகளே எறும்புகளே
எல்லாம் இருக்கட்டும்
எனக்குக் கொஞ்சம்
வைத்துவிட்டு
எடுத்துச் செல்லுங்கள்.

## தகவல் களஞ்சியம்

- ஆசியாக் கண்டத்தில் மிகப்பெரிய தொலைநோக்கி தமிழகத்தில் உள்ள காவலூரில் அமைந்துள்ளது.
- வீடுகளுக்கு வழங்கப்படும் சமையல் எரிவாயுவில் உள்ள முக்கியமான வாயுக்கள் பியூட்டேன், புரோமன்.
- காற்றில் அதிகமாகக் கலந்துள்ள வாயு நைட்ரஜன்.
- வெட்டுக்கிளியின் ரத்தம் வெள்ளை நிறமாக இருக்கும்.
- ரோமானியர்கள் செவ்வாக்கிரகத்தை போர்க்கடவுளாகக் கருதி வழிபட்டனர்.

# முதல் விண்வெளி மங்கை



ஆகாயத்தில் கோட்டை கட்டாதே என்பது பழமொழி. ஆகாயத்திலும் கோட்டை கட்ட முடியும் என்பது புதுமொழி. அந்த அளவிற்கு இன்று மனிதன் முன்னேற்றம் அடைந்து வருகிறான். "வானம் வசப்படுமா?" என்று பதினெட்டாம் நூற்றாண்டு மனிதன் ஏங்கினான். ஆனால், இன்று ஆச்சரியப்பட வைக்கும் புதிய பல முயற்சிகளை மனிதன் மேற்கொள்கிறான். அவற்றின் உச்சகட்டமாக, 1961 இல் சோவியத் யூனியனின் யூரி.ஏ.ககாரின் விண்ணில் புவியைச் சுற்றிச் சாதனை படைத்தார். அதற்கு இரண்டு ஆண்டுகளின் பின்னர் 1963 இல் புவியைப் பலமுறை வலம் வந்து சாதனை படைத்த முதல் விண்வெளி வீராங்கனைதான் வாலண்டினா தெரஷ்கோவா.


இவர் ரஷ்யக் கிராமம் ஒன்றில் 1937 இல் பிறந்தார். தந்தை ஒரு தறிப்பட்டறைத் தொழிலாளி. தாய் ஓர் ஆசிரியை. பாடசாலைப் படிப்பு முடித்த வாலண்டினா ராணுவத் துணி தயாரிப்பு தொழிற்சாலையொன்றில் வேலைக்குச் சென்றார். அங்கே அடிக்கடி ராணுவ உயரதிகாரிகள் வருகை தந்தனர். அங்கே பாரசூட்டில் குதிக்கும் பிரிவைச் சேர்ந்த வீரர்கள் ஒருமுறை விஜயம் செய்தபோது, அவர்களோடு நட்புக்கரம் நீட்டி விரைவில் பாரசூட்டில் இருந்து குதிப்பதைத் தனது பொழுதுபோக்காகவே ஆக்கிக் கொண்டார்.

சாதாரணமாகத் தொடங்கி உயரத்தை அதிகமாக்கிக் கொண்டே போனது இவரது ஆர்வம். எத்தகைய உயரமாக இருந்தாலும் பாரசூட்டில் அநாயசமாகக் குதிக்கும் பெண என்று பலரையும் புருவம் உயர்த்த வைத்தார். மொஸ்கோ சதுக்கத்தில் ஆண்டுதோறும் நடக்கும் ரஷ்யப் புரட்சி தினக் கொண்டாட்டங்களின்போது, 1958 இல் ரஷ்ய அதிபர் முன்னிலையில் ஆயிரக்கணக்கான மீற்றர் உயரத்திலிருந்து பாரசூட்டில் வாலண்டினா குதித்தபோது ரஷ்யா முழுவதும் அவரது பெயர் பரவியது.

சி.தர்ஷிகா, தரம் - 6,
விக்னேஸ்வரா த.ம.வித்.,
பன்விலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தபால் பற்றிய சில அபூர்வ தகவல்கள்






**வருட்ந்தம் ஒக்டோபர் 9 ஆம் திகதி தபால் தினம் அனுஷ்டிக்கப் படுகின்றது. தபால் துறை பற்றிய சில தகவல்களை இங்கு பார்ப்போம்.**

இலங்கையில் தபால் சேவை ஆங்கிலேயர் காலத்திலேயே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு முன்னரே இந்தியாவில் தபால்துறை செயற் பட்டுள்ளது. இந்தியாவின் முதல் தபால் கந்தோர் தமிழகத்தில் சென்னை ஜோர்ஜ் கோட்டையில் 1784 ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

கடிதங்களில் திகதி முத்திரை குத்தும் முறையை, 1680 ஆம் ஆண்டளவில் பிரித்தானிய தபால்துறையினரே அறிமுகப் படுத்தியுள்ளனர். அதனால் பிரித்தானியாவில் 1680 ஆம் ஆண்டுகளுக்கு முன்னரே தபால்துறை இயங்கி வந்துள்ள தாகக் கொள்ளமுடிகின்றது.

1832 ஆம் ஆண்டிலேயே கொழும்பு கண்டி தபால் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்தபால் சேவைக்கு குதிரை வண்டியே பயன்படுத் தப்பட்டுள்ளது. ஆசியாவிலேயே முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட தபால்சேவை இதுவாகும்.

எழுதிய கடிதங்களை உறையிலிட்டு அனுப்பும் வழக்கம் 1839 ஆம் ஆண்டி லேயே நடைமுறைக்கு வந்துள்ளது. அது வரை காலமும் கடிதங்கள் மடிக்கப்பட்டு, மெழுகினால் முத்திரையிடப்பட்டு முகவரி எழுதி அனுப்பப்பட்டுள்ளது.

1865 இல் புகையிரதம் மூலம் தபால் அனுப்பும் முறை இலங்கையில் செயற் படத் தொடங்கியதோடு, 1928 இல் விமானம் மூலம் தபால்களை அனுப்பும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. 1958 இல் பஸ்கள் தபால் சேவைக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளன. கொழும்புக்கு வெளியே முதலாவது தபால் கந்தோர் 1899 இல் திறக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தனியார் தபால் நிலை யங்கள் 1980 இல் உருவாக்கப்பட்டுள் ளன. 2006 ஆம் ஆண்டு புள்ளி விவரங் களின்படி, 4043 அரச தபாற்கந்தோர் களும் 684 தனியார் தபாற்கந்தோர்களும் இலங்கையில் செயற்பட்டுவருகின்றன.

உலகில் முதலாவது கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை 13 x 8 சதுர மீற்றர் அளவில் லண்ட னில் ஓவியர் ஜோன் கால்கெட் ஹார்ஸ்லே என்ப வரால் வடிவமைக் கப்பட்டு, சேர். ஹென்ரி கோல் என்பவரால் தனது பாட்டிக்கு 1843 இல் அனுப்பி வைக்கப்பட்டுள் ளது. இந்த வாழ்த்து அட்டை பின்னர் ஒரு காலத்தில் 28 ஆயிரம்




டொலர்களுக்கு விலைபோயுள்ளதாக அறியமுடிகின்றது.

1999 ஆம் ஆண்டு ஜப்பானில் கடலுக்கடியில் 32.8 அடி ஆழத்தில் உள்ள இடத்தில் சுசாமி பே என்னும் ஒரு தபால்பெட்டி வைக்கப்பட்டுள் ளது. கடலோடும் விளையாட்டு வீரர்கள் நீரால் பாதிப்புறாத பிளாஸ் டிக் கடிதங்களை இத்தபால் பெட்டி யில் இடுவர். அலுவலக ரீதியாக தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தபால் ஊழியரான கடலோடி ஒருவ ரால் இந்தக் கடிதங்கள் பெட்டியிலி ருந்து எடுக்கப்பட்டு விநியோகிக்கப் படுகின்றன. முதலாவது ஆண்டு மாத் திரம் 4273 கடிதங்கள் மேற்படி பெட் டியில் போடப்பட்டிருந்தனவாம்.(உ)

# மஸ்கட்டிலுள்ள இலங்கை சாரணியர் சுவீடன் மன்னருடன் சந்திப்பு



மஸ்கட்டிலுள்ள இலங்கை பாடசாலை சாரணியர்கள் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின்போது சுவீடன் மன்னர் எச்.எம்.கார்ல் கஸ்டாப்பைச் சந்தித்து உரை யாடியதுடன் அவருடன் கைகுலுக்கி மகிழ்ச் சியை தெரிவித்துக் கொண்டனர்.

சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் மஸ்கட் இலங்கைப் பாடசாலையில் குட்டி சாரணிய நண்பர் குழுவும், சாரணியர் நிறுவனமும் ஆரம்பிக்கப்பட்டன. மஸ்கட்டிலுள்ள சகோதார சாரணியருடன் கைகோர்ப்பதற்கென இவர்கள் அங்கு பயணம் மேற்கொண்டனர்.

ஓமானுக்கான இலங்கை சாரணிய ஆணை யாளர் திருமதி லதா சோமதிலக்க தலைமை யில் சென்ற இவர்கள் சாரணியத்தில் காட்டிய திறமையான செயற்பாடுகள் மூலம் பல விருதுகளை வென்றனர். இது தொடர்பான நிகழ்வின்போது சுவீடன் மன்னரைச் சந்தித்த இவர்கள் அவருடன் உரையாடி மகிழ்ந்ததுடன் தமது கைவேலைப்பாடுகளையும் மன்னருக்குக் காட்டினர்.

## சாரணிய குட்டி நண்பர் சேர்ப்பு

ரோயல் இன்ஸ்டியூட் சர்வதேச பாடசாலையில் சாரணிய குட்டி நண்பர்களைச் சேர்க்கும் வைபவம் அண்மையில் சில்வானா திருமதி சாந்தினி பெர்னாண்டோவின் வழிகாட்டலில் நடைபெற்றது. இந்தக் குட்டி நண்பர்கள் மேல் மாகாண ஆணையாளர் திருமதி சமந்தா விஜேகோன், கொழும்புப் பகுதி ஆணையாளர் திருமதி இந்திகா ஜயநெத்தி ஆகியோர் மூலமாக பாடசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்த நிகழ்வின்போது, ரோயல் இன்ஸ்ட்டியூட் தலைவர் திரு.ஜி.டி.பண்டார, அதிபர் திருமதி ஐ.குணவர்தன ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

**Royal Institute**
International School of Higher Education

**Little Friends Enrolment**
*International Girl's School*
Maya Avenue 2010



# விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3813
சே.இந்துஷான் குமார், தரம் 05, சொய்சி.த.வித். பூண்டுலோயா.


அங்.இல: 3814
பே.கவ்யாஷா, தரம் $4^{T}$, விஹார மகாதேவி.ம.க., கண்டி.


அங்.இல: 3815
எம்.ஆர்.ருமைஸ் அஹமட், தரம் 05, ப/முஸ்லிம் ம.வித்., வெளிமடை.


அங்.இல: 3816
எம்.எஸ்.சைபுர்ரஹ்மான், தரம் $7^{A}$, மட்/ஓட்டமாவடி ம.க., வாழைச்சேனை.


அங்.இல: 3817
தேவராஜா சிவாகரன், தரம் 01, யா/ஸ்கந்தவரோதையக் கல்., உடுவில்.


அங்.இல: 3818
வ.சேதுபவன், தரம் $5^{A}$, வ/இறம்பைக்குளம். மகளிர்.வித்.,


அங்.இல: 3819
ஏ.எல்.எம்.இல்ஹாம், தரம் $7^{A}$, க/மு. அல்மிஸ்பா. மஹ.வித்., கல்முனை.


அங்.இல: 3820
யூ.நுபைஸா, தரம் 11, மனாருல் வுலும். மு.வித்., கம்பிரிகஸ்வெவ.


அங்.இல: 3821
என்.பிரமிலா, தரம் $9^{B}$, இராமகிருஷ்ணன் மத்தியகல்லூரி,கலஹா.


அங்.இல: 3822
ரு.செல்வியா, தரம் $8^{B}$, யா/செங்குந்த இ.கல்., கல்வியங்காடு.


அங்.இல: 3823
க.துளசிகரன், தரம் $7^{C}$, மன்/சித்தி விநாயகர் இ.கல்., மன்னார்.


அங்.இல: 3824
எம்.எம்.மப்பாஸ், தரம் 11, அஸ்ரபியா அரபிக்கல்லூரி,புத்தளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்சல்வத்தையைச் சேர்ந்த விஸ்வநாதன்-வசந்தி தம்பதியரின் செல்வப் புதல்வி வி.சரண்யா, 14.10.2010 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.



தெல்தோட்டையைச் சேர்ந்த விஸ்வநாதன்-மல்லிகா தம்பதியரின் செல்வப் புதல்வி வி.தேவலக்ஷனா, 26.10.2010 அன்று தனது ஆறாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் இறைவனின் அருளால் பல்கலையும் கற்று வாழ வாழ்த்துகின்றனர். *(தகவல் - தெய்வராஜ்)*

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



கம்பளையைச் சேர்ந்த பேரின்பராஜா-துஷ்யந்தினி தம்பதியரின் செல்வப் புதல்வி கவ்யாஷா, 26.10.2010 அன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் அனைவரும் வாழ்த்துகின்றனர்.



கல்முனை, 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கிருபராசா-நல்லம்மா தம்பதியரின் செல்வப் புதல்வன் நேறுஜன், 30.10.2010 அன்று தனது பத்தாவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் முருகப்பெருமான் அருள்பெற்று, நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.



பத்கொல கொல்ல, கலேவளையைச் சேர்ந்த மொயிஸ்-ஹலீமுன் நிஷா தம்பதியரின் செல்வப் புதல்வன் அஹமட் அஸ்ரான், 01.11.2010 அன்று தனது பதினொராவது பிறந்தநாளைக் கொண்டாடவுள்ளார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



ச.தனுசன், தரம் - 8C, ஹாட்லிக் கல்., பருத்தித்துறை.



ஜி.தேவமலர், தரம் - 3, விக்னேஸ்வரா த.ம.வித்., பன்வில.




ஆ.பிரஷாந்தினி, தரம் - 10, டயகம கிழக்கு த.வித்., டயகம.




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



எம்.ஜோரா, தரம் - 7, தல்துவை மு.ம.வித்., தல்துவை.



நிஃப்னி ஸ்டெஃப்னா, தரம் - 6, கிங்ஸ்டன் சர்வதேச பாட., கொழும்பு-15.



எம்.நாஸித், தரம் - 8A, கழுகமுவ மத்.கல்., கழுகமுவ.



எம்.மாஹிலா, தரம் - 11, அல்-மினா மு.ம.வித்., பக்மீகொல்ல.




ஆர்.சரண், தரம் - 5, விக்னேஸ்வரா த.ம.வித்., பன்வில.



தி.திரேஷ்குமார், தரம் - 9B, கொட்டகலை த.ம.வித்., கொட்டகலை.



ஸாரா மரியம், தரம் - 2B, நூராணியா மு.ம.வித்., உயன்வத்த.



எஃப்.அஃப்ழா, தரம் - 10, இஹலகினியம மு.ம.வித்., வீரப்பொகுண.




எம்.ஹம்ரி, தரம் - 4, ஸாஹிராக் கல்., கம்பளை.




மனித உடல் உறுப்புக்களை வரைவதற்கு இதுவரை பயிற்சி பெற்ற நாம், இவ்விதழில் மனித உடலை வரைந்து பார்ப்போம். அதற்காக, உடல் உயரத்தை 8 பாகங்களாக வகுத்துக் கொள்வோம். உடலுறுப்புகள் வரையும்போது, இந்த அளவுத்திட்டம் பேணப்பட வேண்டும். இந்த அளவுத்திட்டம் பேணப்படாவிட்டால் நாம் வரையும் ஓவியம் கேலிச்சித்திரம் போல் அமைந்துவிடும். கேலிச்சித்திரமும் ஓர் ஓவியக்கலைதான். எனினும், கருத்து அடிப்படையில் அது வேறுபட்டது.

எனவே, நாம் ஓவியம் ஒன்றை வரையும்போது மேற்கூறிய அளவுத்திட்டங்களைப் பின்பற்றுவதன் மூலம் சிறந்த ஓவியங்களைப் பெறலாம். இந்த அளவுத்திட்ட அடிப்படையில்தான் சிலைகளும் வடிவமைக்கப்படுகின்றன.

**நீங்கள் மனித உருவங்களை வரையும்போது, கீழுள்ள அளவுகளைப் பேணி வரைவதற்குப் பயிற்சி பெறுங்கள்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓநாயைக் கண்டு அச்சம்



அடர்ந்த காட்டில் பிறந்த அந்த குட்டி முயல் எப்போதும் அஞ்சி நடுங்கிக்கொண்டே இருந்தது. எங்கேயாவது மரக் கிளைகள் சடசடக்கும், பறவைகள் சிறகடிக்கும், வெண் பனி மொத்தை மரத்திலிருந்து கீழே விழும், அவ்வளவுதான், முயல் குட்டிக்கு நடுக்கம் பிடித்துவிடும். தன்னை ஏதாவது பிடித்து விடுமோ என்று அஞ்சிப் பதைபதைக் கும்.

'சிலநாட்களில் அந்த முயல் குட்டி வளர்ந்து பெரியது ஆயிற்று. இவ்வாறு அஞ்சி நடுங்குவது அதற்குத் திடீ ரென்று அலுத்துப் போயிற்று. ''எனக்கு யாரிடமும் அச்சம் இல்லை! ஒரு துளி கூடப் பயம் இல்லை'' என்று காடு முழுவ தும் கேட்கும்படி கத்தியது.

இதைக்கேட்ட தாத்தா முயல்களும் அப்பா முயல் களும் வந்து கூடின. தம்பி முயல்களும் தங்கை முயல் களும் தாவி வந்தன. பாட்டி முயல்களும் அம்மா முயல் களும் குமைந்தன. நீள் செவி, மாறு கண், குட்டை வால் முயல் வீராப்புப் பேசுவதை எல்லா முயல்களும் கேட்டன. தங்கள் காதுகளையே அவற் றால் நம்பமுடியவில்லை. ''எதற்குமே அஞ்சாத முயல் இதுவரை உலகில் இருந்ததே கிடையாதே....''

''அடேய், மாறு கண்ணா.... உனக்கு ஓநாயிடம் கூடப் பயம் இல்லையா?''

''ஓநாயிடமும் பயம் இல்லை. நரியிடமும் கரடியிட மும் ஏன் எவரிடத்திலும் எனக் குப் பயம் இல்லை...''

எதற்கும் துணிந்துவிட்டது போல் முயல் தொடர்ந்து கத் திற்று; ''அட நீண்ட பேச்சு எதற் காக? இப்போது என் கையில் ஓநாய் ஒன்று அகப்பட்டால் நானே அதைக்கொன்று தின்று விடுவேன்''

''அப்பப்பா, எவ்வளவு வேடிக்கையான முயல்! எப்பேர்ப்பட்ட அசடு!'' எல்லா முயல்களும் தமக்குள் கூறிச் சிரித்தன. முயல்கள் ஓநாயைப் பற்றிக் கூச்சல் போட்டுக்கொண்டிருந்தபோது, ஒரு ஓநாயே அங்கு வந்துவிட்டது. அந்த ஓநாய் வழக்கப்படி, காட்டில் சுற்றித் திரிந்ததால் அதற்கு நன்கு பசி வந்துவிட்டது. 'இப்போது ஒரு முயல் குட்டியைத் தின்றால் நன்றாக இருக்குமே' என்று நினைத்துக்கொண்ட ஓநாயின் காதில் அந்த முயல்களின் கூச்சல் விழுந்தது. முயல்கள் மிக அருகில் இருப்பதையும் சாம்பல் நிற ஓநாயான தன்னைப் பற்றிப் பேசிக்கொள்வதையும் புரிந்துகொண்டு, அது சட்டென நின்று மோப்பம் பிடித் தது. பின்னர் பதுங்கிப் பதுங்கி முயல்களை நெருங்கிற்று.

கும்மாளம் போட்டுக்கொண்டிருந்த முயல்களின் அருகில் போனதும் அவை தன்னைக் கேலி செய்து சிரித்ததை ஓநாய் மிக நன்றாகக் கேட்டது. அவற் றில் நடுவில் நின்ற முயல் ஒன்று எல்லா வற்றையும்விட அதிகமாகப் பெருமை அடித்துக்கொண்டு ஓநாயைக் கேலி செய்தது. 'அப்படியா தம்பி, பொறு உன்னைக் கொன்று தின்று விடுகிறேன் பார்!' என்று ஓநாய் மனதுக்குள் எண்ணிக்கொண்டு, வீரம் பேசிய அந்த முயல் எது என்று உற்றுப் பார்க்கலா யிற்று. முயல்களோ எதையும் காணாமல் முன்னைவிடக் கோலாகலமாகக் கும்மா ளம் அடித்தன. பெருமை பாராட்டிய முயல் கடைசியில் ஒரு வெட்டப்பட்ட மரத்தின் மேல் ஏறி, குந்திக்கொண்டு சொல்லிற்று;

''கேளுங்கள், பயங்கொள்ளிகளே! என்னைப் பாருங்கள்! இதோ காட்டு கிறேன் உங்களுக்கு ஒரு வித்தை.




நான்.... நான்... நான்...'' என்று திடீரென உளறிக் கொட்டியது. அந்தப் பெருமைக்கார முயலின் நாக்கு மரத்துப்போனது போல் ஆகிவிட்டது. தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த ஓநாயை முயல் கண்டுவிட்டது. மற்றைய முயல்கள் காணவில்லை.

ஆனால், பெருமைக் கார முயல் மட்டும் ஓநாயை முதலில் கண்டுகொண்டது. பயத்தால் அதற்கு மூச்சு விடக்கூடத் துணிவு வரவில்லை.

அதிகளவு பேசிய வீம்புக்கார முயல் பந்து மாதிரி உயரே துள்ளி, நடுநடுங்கி, ஓநாயின் அகலமான நெற்றியின் மேல் பொத்தென்று விழுந்து, பின்னர் குப்புற அடித்து ஓநாயின் முதுகில் உருண்டு, இன்னொரு தரம் துள்ளிக் குதித்து, தப்பி னேன், பிழைத்தேன் என்று ஒரே ஓட்ட மாகப் பாய்ந்து ஓடிற்று. அப்போது ஓநாய் தன்னை விரட்டியபடியே நெருங்கி விட்டதாகவும் இதோ பற்களால் கவ்வி விடும் என்றும் அதற்கு ஓயாமல் தோன்றிக்கொண்டிருந்தது. இறுதியில் பாவம் அந்த முயல் மிகுந்த அச்சத்தில் செத்துவிட்டது போல், கண் களை மூடிக்கொண்டு ஒரு புதருக்கு அடியில் குற்றுயிராக விழுந்தது. ஆனால், ஓநாயோ, அந்த நேரத்தில் மறுதிசையில் ஓடிக் கொண்டிருந் தது. முயல் அதன் மேல் விழுந்தபோது, தன்னை யாரோ துப்பாக்கியால் சுட்டுவிட்டதாக ஓநாய்க் குத் தோன்றியது. ஆகையால், அது ஓட்டம் எடுத்தது. காட்டில் வேறு முயல் களுக்குப் பஞ்சமா என்ன? இது ஏதோ வெறி பிடித்த முயல் போல் இருக்கிறது.

மற்ற முயல்களால் வெகுநேரம் வரை நிதானத்துக்கு வர முடியவில்லை. சில முயல்கள் புதர்களில் நடுநடுங்கிப் பதுங் கின. சில வெட்டப்பட்ட மரங்களின் பின்னே ஒளிந்து கொண்டன. சில கிடங் கில் தடுமாறி விழுந்தன. முடிவில் பதுங்கி இருப்பது எல்லா முயல்களுக்கும் சலித்துப் போயிற்று.

கொஞ்சம் துணிச்சல் உள்ளவை மெல்ல மெல்ல எட்டிப் பார்க்கத் தொடங்கின.

''நம்முடைய வீர முயல் ஓநாயைச் சாமர்த்தியமாகப் பயமுறுத்திவிட்டது! அது மட்டும் இல்லாவிட்டால் நாம் உயிர் தப்பி இருக்க முடியாது. ஆமாம், எங்கே அந்த, அஞ்சாநெஞ்சம் கொண்ட நமது வீர முயல்?'' என்று பேசிக் கொண்டு அதனைத் தேடக் கிளம்பின. அவை போய்க்கொண்டே இருந்தன. ஆனால், முயலை எங்குமே காண வில்லை. வேறு ஓர் ஓநாய் அதைத் தின்று விட்டதா என்ன? இறுதியில் அதைக் கண்டுபிடித்தன. கிடங்கில் ஒரு புதரின் அடியில், அச்சத்தால் குற்றுயிராகக் கிடந்தது.

''அருமை, மிக அருமை மாறு கண்ணா! பெரிய வீரன் நீ. கிழட்டு ஓநாயைச் சாதுரியமாக மிரட்டி விட் டாய். நன்றி தம்பி! நீ வீண் பெருமை அடித்துக்கொள்கிறாய் என்று நாங்கள் நினைத்தோம்'' என்று எல்லா முயல் களும் ஒரே குரலில் பாராட்டின.

இதைக்கேட்ட முயலுக்குச் சட்டென உற்சாகம் வந்துவிட் டது. கிடங்கிலிருந்து வெளியேறி, உடம்பைக் குலுக்கிச் சீராக்கிக் கொண்டு, கண்களைச் சுருக்கிய படி பெருமிதத்தோடு சொல்லிற்று; ''நீங்கள் வேறு எப்படி நினைப்பீர்கள்! கோழைகளா... எல்லாம் அனுபவித் தால்தான் புரியும்'' என்று கூறிய படியே தன்னை முழுமையாக ஒரு தடவை பார்த்துக்கொண்டது. ''ஊம்... சேதம் எதுவும் இல்லை. நன்றாகத் தான் இருக்கிறேன்'' என்று தனக்குள் கூறிக்கொண்டது. அன்று முதல் பாவம் மெய்யாகவே எவரிடமும் தனக்கு அச்சம் இல்லை என்று அந்த முயல் தப்பாக எண்ணத் தொடங்கி விட்டது.

# நிற பேதம் வேண்டாம்

படர்ந்து விரிந்து நிழல் பரப்பிக்கொண்டிருந்தது வேப்ப மரம். பறந்து கொண்டிருந்த வெள்ளைப்புறாவின் கண் களில் வேப்பமரம் தென்பட.... இளைப்பாற எண்ணி, அதன் கிளையில் வந்து அமர்ந்தது. மற்றொரு கிளையில் இரண்டு கிளிகள் சந்தோஷமாய் கதைபேசி சிரித்துக் கொண்டிருந்தன. மகிழ்ச்சியுடன் கிளிகளின் அருகே போய் உட்கார்ந்து, நலம் விசாரித்தது. கிளிகளும் புறாவின் வரவில் மகிழ்ச்சி அடைந்தன.

பனைமரத்தில் அமர்ந்திருந்த காகம் ஒன்று கிளிகளும், புறாவும் சந்தோஷமாகப் பேசிச் சிரிப்பதைக் கண்டு, தானும் அதில் கலந்துகொள்ள விரும்பியது. பனைமரத்தை விட்டுப் பறந்து, ''கா.. கா....'' என்று தன் வருகையை அவர்களுக்குத் தெரிவித்தபடியே எதிரே வந்து அமர்ந்தது.

''வாருங்கள் சகோதரரே!'' கிளிகள் சந்தோஷமாய் வர வேற்றன. அதேசமயம் புறாவின் முகம் மாறியது.காகத்தை அலட்சியமாகப் பார்த்தது. இந்தக் கறுப்போடு இருந்தால் தனக்கு இழுக்கு என்று எண்ணி, விருட்டென்று அங்கி ருந்து பறந்து சென் றது. காகத்தின் முகம் சோகமாய் மாறிவிட கிளிகள் ஆறுதல் கூறின.

ஒருநாள் புறா விற்கு அகோரப் பசி. மயக்கமே வந்துவிடும் போலி ருந்தது. அதனால், அதிக தூரம் பறக்க முடியவில்லை. சிறகுகளை விரிக்கவே சிரமமாக இருந்தாலும் மெல்ல இறக்கை களை அடித்துக்கொண்டு நகர்ந்தது. சிறிது தூரம் சென் றதும் பாதையில் சிதறிக் கிடந்த கோதுமை புறாவின் கண்களில் பட்டது. அதைப் பார்த்ததும் புறா சந்தோஷம் அடைந்தது.

அவ்விடத்தில் போய் அமர்ந்த புறா, பசியில் வேகவேக மாய் கோதுமையைக் கொத்தியது. அதனை உண்டபின் கால்களை நகர்த்த முயன்றபோது, அதனால் முடிய வில்லை. கால்கள் எதிலோ சிக்கிக் கொண்டிருப்பதைக் கவனித்த புறாவிற்கு, பகீரென்றது.

வேடன் விரித்த வலையில் விழுந்து விட்டோம் என்பது புறாவிற்கு அப்போதுதான் புரிந்தது. வலையிலிருந்து கால்களை எடுக்க எவ்வளவோ போராடியது. முடியவே இல்லை. மரணம் உறுதியாகி விட்டது. வேடனுக்கு உண வாகப் போகிறோம் என்பது தெரிந்ததும் எதுவும் செய்ய முடியாமல் திகைத்துநின்றது.

அப்போது காகம் ஒன்று வானில் பறப்பது தெரிந்தது. மரணபயத்தில் இருந்த புறாவின் கண்களுக்கு இப்போது காகத்தின் நிறம் கண்ணுக்குத் தெரியவில்லை. கடவுளா கவே தெரிந்தது. புறாவின் மனதிலிருந்த கசடுகள் எல்லாம் காணாமல் போயின. ஆணவம் அடியோடு அழிந்து போயி ருந்தது.

''காக்கையாரே... காப்பாற்றுங்கள் என்னை'' என உரத்த குரலில் அழைத்தது புறா.

பறந்து கொண்டிருந்த காகத்தின் காதில் புறாவின் மரண ஓலம் விழுந்தது. வலையில் புறாவைக் கண்டதும், ஒரு நிமிடம் தயங்கியது. ஆனாலும், மரணப்பிடியில் அதனை விட்டு விட்டுச் செல்லவதற்கு காகத்திற்கு மனம் வரவில்லை.

''என்னை மன்னித்து விடுங்கள் காக்கையாரே... எப்படியாவது என்னைக் காப்பாற்றுங்கள்''

அதனைப் பார்க்க காகத்திற்குப் பரிதாபமாக இருந்தது. உடனே மனம் இளகி, ''கா.... கா'' என்று பெருங் குரலெடுத்து தன் இனத்தை அழைக்க, அடுத்த நிமிடம் நூற்றுக்கணக்கான காகங்கள் அங்கு வந்து குழுமின. அவை சில நிமிடங்களில் வலையிலிருந்த புறாவை மீட்டன.

குணத்தால் உயர்ந்து நின்றிருந்த காகங்களின் முன் தலைவணங்கி நின்றது புறா. அதன்பின் எந்தப் பேதமும் பார்க்காமல் எல்லோரிடமும் ஒற்றுமையுடன் பழக ஆரம்பித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ආයුබෝවන்
# ஆயுபோவன்
# வணக்கம்

**இன்றைய பாடத்தில் நாம் அம்மா, மாமி, மகள் ஆகியோருக்கு இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.**



| | |
|---|---|
| දුව: | **අම්මේ අන්න නැන්දා එනවා.** |
| | அம்மே அன்ன நெந்தா எனவா. |
| மகள்: | அம்மா அதோ மாமி வருகிறார். |
| අම්මා: | **තනියමද නැන්දා එන්නේ?** |
| | தனியமத நெந்தா என்னே? |
| அம்மா: | மாமி தனியாகவா வருகிறார்? |
| දුව: | **ඔව් අම්මේ.** |
| | ஒவ் அம்மே. |
| மகள்: | ஆம் அம்மா. |
| අම්මා: | **එන්න නංගි, වාඩිවෙන්න.** |
| | என்ன நங்கி, வாடிவென்ன. |
| அம்மா: | வாருங்கள் தங்கை, உட்காருங்கள். |
| අම්මා: | **නංගි කොහේද ගියේ?** |
| | நங்கி கொஹேத கியே? |
| அம்மா: | தங்கச்சி எங்கே போனீர்கள்? |
| නැන්දා: | **මම අයියලගේ ගෙදර ගියා. අපේ දුවගේ මඟුලුත් ලඟයිනේ.** |
| | மம அய்யலகே கெதற கியா. |
| | அபே துவகே மகுலுத் லங்கய்னே. |
| மாமி: | நான் அண்ணன் வீட்டிற்குப் போனேன். |
| | மகளின் திருமணமும் விரைவில் வருகிறதுதானே. |
| අම්මා: | **ආ... ඔව් නේන්නම්. කවදද නංගි දිනේ?** |
| | ஆ... ஒவ் நேன்னம். கவதத நங்கி தினே? |
| அம்மா: | ஆ... ஆமாம். என்ன திகதியில் தங்கச்சி. |
| නැන්දා: | **ලබන මාසේ විසිවෙනි සෙනසුරාදා.** |
| | லபன மாசே விசிவெனி செனசுராதா. |
| மாமி: | எதிர்வரும் மாதம் இருபதாம் திகதி சனிக்கிழமை. |
| අම්මා: | **දැන් ඔක්කොම ලෑහැස්තිද?** |
| | தென் ஒக்கொம லெஹெஸ்தித? |
| அம்மா: | தற்போது எல்லாம் ஆயத்தமாகிவிட்டதா? |
| නැන්දා: | **තවම නැහැ අක්කේ.** |
| | தவம நெஹெ அக்கே. |
| மாமி: | இன்னும் இல்லை அக்கா. |
| දුව: | **මට අඬගැහුවනම් මම එනවනේ උදව්වට.** |
| | மட அன்டகெஹுவநம் மம எனவனே உதவ்வட. |
| மகள்: | என்னைக் கூப்பிட்டால் நான் உதவிக்கு வந்திருப்பேனே. |
| දුව/අම්මා: | **ඔව්. ඕන උදව්වක් අපි කරන්නම්.** |
| | ஒவ். ஓன உதவ்வக் அபி கறன்னம். |
| மகள்/அம்மா: | ஆம். நாங்கள் வேண்டிய உதவிகளைச் செய்கின்றோம். |



## பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

**உதாரணம்:** அம்மா அதோ மாமி வருகிறார்.
**අම්මේ අන්න නැන්දා එනවා.**

i. மகளின் திருமணமும் விரைவில் வருகிறது.
..................................................................

ii. எதிர்வரும் மாதம் இருபதாம் திகதி சனிக்கிழமை.
..................................................................

iii. நாங்கள் வேண்டிய உதவிகளைச் செய்கின்றோம்.
..................................................................






நிகழ்கால வினைமுற்று வாக்கியங்களில் (Present Perfect Tense) காணப்படுகின்ற வினா வாக்கியம், உடன்பாடு வாக்கியம் மற்றும் எதிர்மறை வாக்கியம் முதலான வற்றை ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Have you done your work?
நீ உனது வேலையை செய்துவிட்டாயா?
(வினா வாக்கியம் - Interrogative)

(ஆ) Yes, I have done my work.
ஆம், நான் எனது வேலையை செய்துவிட்டேன்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(இ) No, I haven't done my work yet.
இல்லை, நான் இன்னும் எனது வேலையை செய்துவிடவில்லை.
(எதிர்மறை வாக்கியம் - Negative)

(ஈ) Have you finished your work?
நீ உனது வேலையை செய்து முடித்துவிட்டாயா?
(வினா வாக்கியம் - Interrogative)

(உ) Yes, I have finished my work.
ஆம், நான் எனது வேலையை செய்து முடித்துவிட்டேன்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஊ) No, I haven't finished my work yet.
இல்லை, நான் இன்னும் எனது வேலையை செய்து முடித்துவிடவில்லை.
(எதிர்மறை வாக்கியம் - Negative)

(எ) Have you met Nimal recently?
நீ சமீபத்தில் நிமாலை சந்தித்துள்ளாயா?
(வினா வாக்கியம் - Interrogative)

(ஏ) Yes, I have met Nimal recently.
ஆம், நான் சமீபத்தில் நிமாலை சந்தித்துள்ளேன்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஐ) No, I haven't met him for a long time.
இல்லை, நான் அவனை நீண்டகாலமாக சந்தித்திருக்கவில்லை.
(எதிர்மறை வாக்கியம் - Negative)

(அ) Have you made any mistake?
நீ ஏதேனும் தவறைச் செய்துள்ளாயா?
(வினா வாக்கியம் - Interrogative)

(ஆ) Yes, I have made a mistake.
ஆம், நான் தவறு ஒன்றைச் செய்துள்ளேன்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(இ) No, I haven't made any mistake.
இல்லை, நான் எதுவித தவறும் செய்துவிடவில்லை.
(எதிர்மறை வாக்கியம் - Negative)

(ஈ) Have you found your key?
நீ உனது திறப்பைக் கண்டெடுத்துவிட்டாயா?
(வினா வாக்கியம் - Interrogative)

(உ) Yes, I have found my key.
ஆம், நான் எனது திறப்பைக் கண்டெடுத்துவிட்டேன்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative)

(ஊ) No, I haven't found my key yet.
இல்லை, நான் எனது திறப்பை இன்னும் கண்டெடுத்துவிடவில்லை.
(எதிர்மறை வாக்கியம் - Negative)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுரங்கப் பணியாளர்களை மீட்டமை நல்ல அனுபவம்

## -நாஸா அதிகாரிகள் கருத்து



சிலியில் சுரங்கத்தினுள் சிக்குண்ட 33 பேர் வெற்றிகரமாக வெளியேற்றப்பட்டமையானது எதிர்கால விண்வெளி ஆராய்ச்சியாளர்களுக்குத் தேவையான ஏராளமான அனுபவங்களை, பயன்களைத் தந்துள்ளதாக அமெரிக்காவின் நாஸா நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுரங்கப் பணியாளர்களை மீட்டெடுப்பதில் நாஸா அதிகாரிகளின் பங்களிப்பு கணிசமான அளவில் இருந்தமை குறிப்பிடத் தக்கது.

இதற்கமைய, எதிர்காலங்களில் விண்வெளியில் நீண்ட நாட்கள் தங்கியிருப்பதற்கும், புதிய கோள்களைக் கண்டுபிடிப்பதற்கும் சிலியில் மேற்கொள்ளப்பட்ட மீட்புப் பணி அனுபவங்களானது நல்லதோர் வாய்ப்பை ஏற்படுத்தியிருந்தது என நாஸா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன், அதி சக்தி வாய்ந்த தமது தொழில்நுட்பக் கருவிகள் மற்றும் செய்மதி ஆகியனவற்றைப் பயன்படுத்துவதற்கும் நல்லதோர் சந்தர்ப்பம் கிடைத்தது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.



அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# தெரிந்து கொள்வோம்



✱ ஆரம்ப காலங்களில் எல்பியன் என்று அழைக்கப்பட்ட நாடு எது?

**- பிரிட்டன்.**




✱ மைக்கல் என்ஜலோ எந்தக் காலப்பகுதியில் வாழ்ந்தார்?

- கி.பி.1475 - 1564



✱ எட்டாவது ஹென்ரி மன்னர் எந்த அரச பரம்பரைக்கு உரித்துடையவராவார்?

**- டியுடர்.**



✱ மருத்துவ விஞ்ஞானத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?

**- ஹிப்போக்ரட்டீஸ்.**



✱ எகிப்தின் கடைசி மன்னன் யார்?

**- ஃபருக் மன்னன்.**



✱ சீனப்பெருஞ்சுவரைக் கட்டும் பணிகளை ஆரம்பித்த மன்னன் யார்?

**- ஷி ஹுவாங் டி மன்னன்.**



✱ சுதந்திர அல்ஜீரியாவின் முதலாவது ஜனாதிபதி யார்?

**- அஹமட் பென்பெலா.**

✱ மகா எலக்ஸான்டர் மன்னரின் தந்தையார் பெயர் என்ன?



**- இரண்டாம் பிலிப் மன்னன்.**



✱ பிரான்ஸியப் புரட்சி ஆரம்பமாகிய வருடமும், முடிவடைந்த வருடமும் எது?

- 1789 - 1799



✱ இலங்கையின் முதலாவது விமானநிலையம் எது?

**- இரத்மலானை விமான நிலையம்.**



✱ இலங்கையில் நூதனசாலை எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது?

**- 1877 ஆம் ஆண்டில்**

✱ இலங்கையில் மேல்மாகாணத்தில் அடங்குகின்ற மாவட்டங்கள் எவை?

**- கொழும்பு, களுத்துறை, கம்பஹா**

✱ இலங்கையில் தேசிய அடையாள அட்டை விநியோகம் எந்த ஆண்டில் ஆரம்பமாகியது?

**- 1971 ஆம் ஆண்டில்**

✱ இலங்கையின் முதலாவது பெண் தூதர் யார்?

**- லொரினி சேனாரட்ன**

# தீவுகளை சீனா ஆக்கிரமிப்பதாக ஜப்பானில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

சீனாவின் கிழக்கு கடற்பரப்பில் காணப்படுகின்ற குட்டித்தீவுகள் சிலவற்றை சீனா ஆக்கிரமிப்பதாகவும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜப்பானில் சிலர் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

பொருளாதாரத்துறையில் உயர்ச்சி கண்டு வருகின்ற வல்லரசு நாடுகளான சீனாவும், ஜப்பானும் மேற்படி தீவுகளுக்கு உரிமை கொண்டாடுவதில் போட்டி போட்டு வருகின்றன. மனிதர்களற்ற இந்த தீவுகளுக்கு 'சென்டிகாகு' என்று ஜப்பான் பெயரிட்டுள்ளது. ஆனால் சீனாவோ 'டியாயு' என்று அத்தீவுகளுக்கு பெயரிட்டுள்ளது.




சில தினங்களுக்கு முன்னர் சீனா மீன்பிடிப்படகொன்று குறித்த தீவுப் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருக்கையில் அப்பகுதியில் காணப்பட்ட ஜப்பானிய கடற்படை படகொன்றுடன் மோதியது. இதனை அடுத்து ஏற்பட்ட பிரச்சினைகளையடுத்தே, ஜப்பானுக்கான சீன தூதரகத்தின் முன்பாக ஜப்பானியர்கள் சிலர் குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். இத்தீவுகள் ஜப்பானுக்கு மட்டுமே சொந்தமானது என்று ஜப்பானியர் கோஷமிட்டுள்ளனர்.

# உலகிலேயே குள்ளமானவர் கின்னஸ் சாதனை ஏட்டில்

உலகிலேயே மிகவும் குள்ளமான மனிதர் என்று கின்னஸ் சாதனை ஏட்டில் பதியப்பட்டுள்ளார் நேபாள நாட்டைச் சேர்ந்த கஜேந்திர தாப்பா. கடந்த 14 ஆம் திகதி தனது 18 ஆவது வயதை எட்டியதும் மேற்படி சாதனை ஏட்டில் அவரது பெயர் பதியப்பட்டுள்ளது.



26.4 அங்குலம் (67 செ.மீ) உயரத்தைக் கொண்டுள்ள இவரது எடை 12 இறாத்தல் (5.5 கிராம்) ஆகும்.

இதற்கு முன்னர் உலகிலேயே மிகவும் உயரம் குறைந்த குள்ளமானவர் என்று கின்னஸில் பதியப்பட்டிருப்பவர் கொலம்பியாவின் எட்வேர்ட் நினோ ஹர்மன்டெஸ் என்பவராவார். இவர் கஜேந்திராவை விட இரண்டு அங்குலம் உயரம் கூடியவராவார். அவரது வயது 24 ஆகும்.

சுமார் ஒருவருட காலத்திற்கு முன்பிருந்தே கஜேந்திரா உலகிலேயே உயரம் குறைந்தவர் என பிரபல்யத்தைப் பெற்றிருந்த போதிலும் அப்போது அவர் 18 வயதை அடைந்திருக்காததால் சாதனை ஏட்டில் அவரது பெயர் பதியப்படவில்லை.

எனினும் இந்தவருடம் கஜேந்திரா 18 வயதை அடைந்தமையின் காரணமாக, உலகிலேயே உயரத்தில் குறைந்தவர் என்று தற்போது கின்னஸ் சாதனை ஏட்டில் இடம்பிடித்துள்ளார்.

## அற்லஸ் கேள்வி - 279

**கேள்வி:** உலகிலேயே உயரம் குறைந்த மனிதரின் உயரம் எத்தனை செ.மீற்றர்?

**சரியான விடை.......................................**

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே உலகைக் காண்போம், கேள்வி - 279, விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

## போட்டி இல - 277 இன் சரியான விடை: லண்டன்

**பரிசு பெறுவோர்**

எஸ்.லக்ஷ்மிகுமாரி,
52, கோபிகடை, தண்ணிமலை,
உந்துகொடை.

சி.பவிதா,
60, மருதடி வீதி, யாழ்ப்பாணம்.

கா.அபிஷேக் கோபால்,
D 9, 2 ஆம் நவகம்புர, கொழும்பு - 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் விளையாட்டு விழா நாவலப்பிட்டியில் நடைபெறும்





யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இளைஞர் விளையாட்டு விழா நாவலப்பிட்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, முன்னர் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடாத்தப்பட இருந்த இப்போட்டிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 11ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை நாவலப்பிட்டி ஜயத்திலக்க விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் போதிய வசதிகள் இல்லாமையின் காரணமாகவே, போட்டிகளை வேறு இடத்தில் நடத்தவேண்டி உள்ளதாக இளைஞர் விவகார பிரதி அமைச்சர் அறிவித்துள்ளார். இப்போட்டியில் நாடளாவிய ரீதியில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொள்ளவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மேற்கிந்திய தீவுகளுக்கு புதிய தலைவர்



மேற்கிந்திய தீவுகள் கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியிலிருந்து கிறிஸ்கெய்ல் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக டெரன் சமி நியமிக்கப்பட்டுள்ளார். தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்ட கிறிஸ்கெய்ல் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் தலைவர் பதவியில் நீடித்திருந்த போதிலும் பல போட்டிகளில் மேற்கிந்திய தீவுகள் அணி தோல்வியையே சந்தித்தது. அது மட்டுமன்றி மேற்கிந்திய கிரிக்கெட் சபையுடன் பல சந்தர்ப்பங்களில் சர்ச்சைகளிலும் ஈடுபட்டார். இதன் காரணமாகவே தலைமைப் பதவி மீளப் பெறப்பட்டது.




எனினும் நவம்பர் மாதம் இலங்கை வரவுள்ள டெரன் சமி தலைமையிலான மேற்கிந்திய தீவுகள் அணியில் கிறிஸ்கெய்ல் இடம்பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஹொங்கொங் சிக்ஸர்ஸ்



நவம்பர் 6, 7 ஆம் திகதிகளில் அணிக்கு ஆறு பேர் கொண்ட ஹொங்கொங் சிக்ஸர்ஸ் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள அணிகளில் இலங்கை அணியும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அணியின் தலைவராக ஜீவந்த குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.




1992 ஆம் ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு வருடமும் இந்த ஹொங்கொங் சிக்ஸர்ஸ் போட்டி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. 2007 ஆம் ஆண்டு இலங்கை அணி இப்போட்டியில் செம்பியன் கிண்ணத்தை வெற்றியீட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியின் விபரம் வருமாறு:

ஜீவந்த குலதுங்க, இந்திக்க டீ.சேரம், கௌசல்ய வீரரத்ன, தில்ஹார லொக்கு ஹெட்டிகே, சிந்தக்க ஜயசிங்க, டில்ருஷன் பெரேரா, கோசல குலசேகர.

# ஸாஹிரா சுப்பர் 16: ஸாஹிரா அணி செம்பியன்

## மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் விருது





கொழும்பு ஸாஹிரா கல்லூரி பழைய மாணவர் தலைவர்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆறாவது தடவையாகவும் அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற அணிக்கு ஏழுபேரைக் கொண்ட கால் பந்தாட்ட சுற்றுப் போட்டிகளின் இறுதிப் போட்டியில் கொழும்பு ஸாஹிரா கல்லூரி வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தையும் ரூ.50,000 பணப்பரிசையும் பெற்றுக்கொண்டது.

இலங்கை கால்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் கடந்த 16 ஆம் திகதி கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் நடைபெற்ற மேற்படி போட்டியில் 16 பாடசாலைகள் போட்டியிட்டிருந்தன. போட்டியின் முதல் சுற்றில் வெற்றியீட்டிய அணிகளுக்கிடையே நடைபெற்ற கால் இறுதிப் போட்டியில் கந்தானை டீ.மஸ்னூட் கல்லூரி, கொழும்பு இசிபத்தன கல்லூரி, கொழும்பு ஸாஹிரா கல்லூரி, புனித பெனடிக் கல்லூரி ஆகியன வெற்றியீட்டியதுடன் அரையிறுதியில் இசிபத்தன கல்லூரியும், டீ மஸ்னூட் கல்லூரியும் போட்டியிட்டதில் இசிபத்தன கல்லூரி மேலதிக நேரப்போட்டியில் 2 - 1 என்ற கோல்ட் கணக்கில் விளையாடி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியதுடன், மறு போட்டியில் ஸாஹிரா கல்லூரி பெனடிக் கல்லூரியை 1 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. அதன்படி இறுதிப் போட்டியில் ஸாஹிராக் கல்லூரி, இசிபத்தன கல்லூரியுடன் கடுமையாகப் போட்டியிட்டதில் இரண்டு அணிகளுமே எந்தவொரு கோலையும் பெறாதால் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. அதிலும் எந்தவொரு அணியும் கோல் பெறாததால், பெனால்டிக் முறையில் 3 -2 என்ற கோல் கணக்கில் ஸாஹிரா கல்லூரி வெற்றியீட்டியது.

பிளேட் இறுதிப் போட்டியில் கொழும்பு ஜோசப் கல்லூரியும் றோயல் கல்லூரியும் மோதியதில் பெனால்டி முறையில் 3- 2 என்ற கணக்கில் ஜோசப் க.ல்லூரி வெற்றியீட்டியது. இப்போட்டியில் முதற்தடவையாக யாழ். மானிப்பாய் இந்துக்கல்லூரி கலந்து கொண்டதுடன் போட்டியின் நேர்மையான, ஒழுக்க சீலமான அணிக்கான விருதையும் பெற்றது.

# தேசிய சைக்கிளோட்டப் போட்டிகள் 6 ஆம் திகதி

## இரத்தினபுரியில் நடைபெறும்

இலங்கை சைக்கிளோட்ட சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேசிய சைக்கிளோட்டப் போட்டிகள் 10 வருடங்களின் பின்னர் மீண்டும் நொவம்பர் 6 ஆம் திகதி இரத்தினபுரியில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர், ஆடவர் என இரண்டு பிரிவுகளில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில் மாவட்ட அடிப்படையில் பங்குகொள்ளக் கூடிய போட்டியாளர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது. அதன்படி கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களின் சார்பாக தலா 12 பேரும், குருநாகல் மாவட்டத்திலிருந்து 10 பேரும், அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து 6 பேரும், காலி மாவட்டத்திலிருந்து 4 பேரும், கண்டி, கேகாலை மாவட்டங்களின் சார்பாக தலா 2 பேரும் பங்குபற்றுவார்கள் என்று சைக்கிளோட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது.



இரத்தினபுரி நகரசபைக்கு அருகே இப்போட்டிகள் ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்டியூடாக சில வான்பொருட்களை நோக்குவோம்




பொதுவாக வெற்றுக் கண்களால் காண முடியாத வான் பொருட்கள் உட்பட பல்வேறு விடயங்களை இரவுவேளைகளில் தொலைக்காட்டி ஒன்றின் மூலம் தெளிவாகப் பார்க்கலாம்.

## சந்திரன்

இரவு வானில் தொலைக்காட்டி மூலம் பார்க்கக்கூடிய முக்கிய வான்பொருள் சந்திரனே. அரைச் சந்திரன் அல்லது முக்கால் சந்திரன் காட்சியளிக்கும் தினங்களே சந்திரனை அவதானிப்பதற்கு உகந்த தினங்களாகும். பூரண சந்திர தினத்தன்று சூரிய ஒளி சந்திரன் மீது முழுமையாக விழுவதால் தெளிவாக எதனையும் அவதானிக்க முடியாது. சந்திரனில் நிழல் இருக்கும் பொழுது அதன் தரை, மலை, சமவெளி போன்றவற்றைத் தெளிவாகக் காண முடியும்.



## புதன்

சூரியனின் அருகில் இருக்கும் புதன் கிரகத்தை அவதானிப்பது சற்று சிரமமானதாகும். சூரியோதயத்தின் பின்பும் சூரியன் சற்று மறைவதற்கு முன்பாகவும் கிழக்கு மற்றும் மேற்கு வானில் இளம் செம்மஞ்சள் நிறத்தில் சிறிய நட்சத்திர மொன்றைப் போல் புதன் கிரகம் தெரியும்.

## வெள்ளி

சூரியனுக்கு அருகில் புதனுக்கு அடுத்ததாக அமைந்துள்ள கிரகம் வெள்ளி. இது இரவில் சந்திரனுக்கு அருகில் மிகப் பிரகாசமாக காட்சி அளிக்கும். வெள்ளிக் கிரகமானது ஒரு காலத்தில் கிழக்கு வானில் தோன்றுவதைக் காணலாம். இந்நாட்களில் இரவு 7.00 மணியளவில் மேற்கு வானில் 40 பாகை அளவு உயரத்தில் மிகப் பிரகாசமாகத் தெரிவது வெள்ளிக்கிரகமே. தொலைக்காட்டி மூலம் பார்க்கும்பொழுது வெள்ளிக் கிரகம் ஒரு அரிவாள் வடிவத்தில் மின்னும். இக்கிரகம் வட்டவடிவமாகக் காட்சியளிக்காது.

## செவ்வாய்

செவ்வாய்க் கிரகம் செந்நிறத்தில் காட்சியளிக்கும். இரவு வானில் செந்நிற நட்சத்திரம் போல் காட்சி அளித்தால் அது செவ்வாய்க் கிரகம் என அறிந்துகொள்ளுங்கள். 7X50 அளவுடைய அல்லது அதனைவிடப் பெரிய அளவுள்ள தொலைக்காட்டி மூலம் பார்க்கும் பொழுது செந்நிறக் கோள வடிவத்தில் இது கண்களுக்குப் புலப்படும்.



## வியாழன்

தொலைக்காட்டி மூலம் பார்க்கும் பொழுது தெளிவாகக் கண்டுகொள்ளக்கூடிய கிரகம்தான் வியாழன். வியாழனை மிகவும் நுணுக்கமாக அவதானித்தால் அதன் குறுக்கே சாம்பல் நிற நாடா போன்ற ஓர் அமைப்பு இருப்பதை அவதானிக்கலாம். வியாழனைச் சுற்றிப் பயணிக்கும் துணைக்கோள்களில் அயோ, யுரோப்பா, கெலிஸ்ட்டோ மற்றும் கெனிமிட் எனும் பிரதான நான்கு துணைக்கோள்களை சிறு நட்சத்திர வடிவில் தொலைக்காட்டி மூலம் அவதானிக்கலாம். ஒவ்வொரு நாள் இரவிலும் ஒரே நேரத்தில் இந்த துணைக்கோள்களை பார்க்கும்பொழுது, நாளுக்கு நாள் அவை அமைந்துள்ள இடம் மாறுபடுவதையும் அவதானிக்கலாம்.

## சனி

வெற்றுக் கண்களாலும் தொலைக் காட்டி மூலமாகவும் காணக்கூடிய இறுதிக் கிரகம் சனிக்கிரகம் ஆகும். தொலைக் காட்டி மூலம் பார்க்கும்பொழுது சனிக்கிரகத்தைச் சுற்றிக் காணப்படும் அலங்கார வளையத் தொகுதியை தெளிவாகக் காணலாம். இளம் மஞ்சள் நிற இருள் சூழ்ந்ததாக சனிக்கிரகம் காட்சியளிக்கும்.

கிரகங்களைத் தவிர, வேட்டைக்காரன் நட்சத்திரத்தை மண் நிறப் புள்ளியாக தொலைக்காட்டி மூலம் காணலாம். தொலைக் காட்டி மூலம் காணக்கூடிய மற்றொரு விண்பொருள் என்ரோமிடா பால்வீதி ஆகும். இது புவியில் இருந்து சுமார் 2,500,000 ஒளிவருட தூரத்தில் அமைந்துள்ளது. டிசம்பர் மாதம் வானின் வடபகுதியின் மத்தியில் தோன்றும் என்ரோமிடா பிரகாசமான புள்ளியாகக் காட்சியளிக்கும்.

மேலும் சந்திரகிரகணம் தோன்றும் காலங்களில் தொலைக்காட்டி மூலம் பல வான்பொருட்களை தெளிவாகக் காணலாம். அவற்றில் புவியிலிருந்து விண்ணில் நிலைநிறுத்தப்பட்டுள்ள பல்வேறு செய்மதிகளும் அடங்கும். தொலைக்காட்டியூடாக பகல் வேளைகளில் காணக்கூடிய அனைத்தும் சூரியனோடு தொடர்பு பட்டவையாகும். தொலைக்காட்டி மூலம் சூரியனை அவதானிக்கும்போது கட்டாயமாக பாதுகாப்பு வில்லையூடாகவே அவதானிக்கப்படல் வேண்டும். இல்லையெனின் சூரியக் கதிர்கள் கண்களைக் குருடாக்கிவிடும். சூரியன் புவியில் இருந்து சுமார் பல்லாயிரம் கிலோமீற்றர் தூரத்தில் இருந்தாலும் அதன் ஒளி மிகப்பிரகாசமானது.






# செயற்கைக்கோள் ஒன்றை ஏவுவதற்கான செலவு

விண்வெளிக்கு செயற்கைக்கோளை அனுப்புவதற்கு ஏற்படும் செலவு, செயற்கைக்கோளுக்கான சுற்றுப்பாதை உயரத்தையும் அதன் எடையையும் பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது. இதில் தாழ்புவி சுற்றுப்பாதை (Low Earth Orbit) என்பது சுமார் 400 கிலோமீற்றர் உயரம் கொண்டது.

உதாரணமாக, 40 கிலோ எடையுள்ள செயற்கைக்கோளைக் கொண்டுசெல்வதற்கு சுமார் 5 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். 'இன்சாட்-சி' போன்ற ஏறத்தாழ 1 தொன் எடைகொண்ட செயற்கைக்கோளை, 36 ஆயிரம் கிலோமீற்றர் உயரத்துக்குக் கொண்டுசென்று புவிநிலை வட்டப்பாதையில் (Geo Stationary Orbit) நிலைநிறுத்த, 40 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகின்றது.

# நட்சத்திரங்களின் நிறம்

விண்ணில் நாம் காண்கின்ற அனைத்து நட்சத்திரங்களுக்கும் நிறம் உண்டு. ஒவ்வொரு நட்சத்திரத்தினதும் மேற்பரப்பில் நிலவும் வெப்பத்தைப் பொறுத்து அதன் நிறம் மாறுபடுகிறது. சில நட்சத்திரங்கள் குளிர்ச்சியாக இருக்கும். இன்னும் சில அதிக வெப்பத்தைக் கொண்டிருக்கும். குளிர்ச்சியான நட்சத்திரங்களின் புறவெப்பம் 3000° செல்ஸியஸாக இருக்கும். இவை சிவப்பு நிறத்தில் காணப்படும். மிகுந்த வெப்பமுடைய நட்சத்திரங்களின் வெப்பநிலையோ, 10000° செல்ஸியஸிலிருந்து உயர்வடைந்து செல்லும். இத்தகைய நட்சத்திரங்கள் நீல நிறத்தில் ஒளிரும். நமக்கு ஒளியைத் தருகின்ற சூரியனும் ஒரு நட்சத்திரம்தான். இதன் புறவெப்பம் சுமார் 5000° எனக் குறிப்பிடப்படுகின்றது. சூரியனோ மஞ்சள், வெள்ளை கலந்த நிறத்தில் காணப்படும். எனினும், நட்சத்திரங்களின் நிறங்களை வெற்றுக் கண்களால் காண முடியாது. சக்தி வாய்ந்த தொலைக்காட்டியூடாகவே அவற்றைக் காணமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்


1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2010.11.03 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 284**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


## வாக்கியங்களை ஒழுங்கமைத்து ஒரு குட்டிக்கதையைப் பெறுங்கள் (5)

1. ஆனால், அவற்றில் ஒன்றுகூடப் பிரசுரமாக வில்லை. அவர் அனுப்பும் கதைகள் திரும்பி வருவது தொடர்ந்துகொண்டே இருந்தது.
2. அந்த மகிழ்ச்சியை டிக்கன்ஸால் தாங்க முடியவில்லை. ஆனந்தக் கண்ணீர் விட்டவாறு இரவெல்லாம் உறங்காமல் தெருக்களைச் சுற்றிக் கொண்டிருந்தார்.
3. உலகப் புகழ்பெற்ற சார்ள்ஸ் டிக்கன்ஸ், சிறுவயதில் பத்திரிகைகளுக்கு ஏராளமான கதைகளை எழுதி அனுப்பினார்.
4. ஆனால், டிக்கன்ஸ் புகழ்பெற்ற பின்னர் பத்திரிகை ஆசிரியர்களும் நூல் வெளியீட்டாளர்களும் அவரது ஒவ்வொரு வார்த்தையையும் கணக்கிட்டு-சன்மானம் கொடுத்து-போட்டிபோட்டு அவரது கதைகளைப் பிரசுரித்தனர்.
5. ஒரு நாள் சற்றும் எதிர்பாராத வகையில் ஒரு பத்திரிகையில் அவரது கதை பிரசுரமாகிவிட்டது.
6. ஆரம்பத்தில் இவர் எழுதிய கதைகளுக்கு அன்பளிப்புகளோ, பணமோ கிடைக்கவில்லை.

## எழுத்துக்களை முறையே இணைத்து உருவை நிறந்தீட்டுக (2)




## எத்தனை உள்ளன? (1)



## ஒத்த கருத்துச் சொல்லுடன் இணைக்க (4)


| | |
|---|---|
| 1. இடிபாடு | 1. சம்பளம் |
| 2. ஊதியம் | 2. உயர்வு |
| 3. கோரிக்கை | 3. சிதைவு |
| 4. மேன்மை | 4. தினம் |
| 5. நாள் | 5. வேண்டுகோள் |

## வித்தியாசமான உருவில் X அடையாளமிடுக (3)




## அறிவுக்கு விருந்து 281 விடைகள்

**போட்டி: 01**



**போட்டி: 02**




**போட்டி: 03**

snow, lightning, cloud, sun, tornado, rain

**போட்டி: 04**

1. சச்சரவு 2. கன்னம்
3. செஞ்சிலுவை
4. காலைப்பொழுது
5. உழவன்

**போட்டி: 04**

(A) 1. நன்றிக்கு வித்தாகும் நல்ஒழுக்கம். தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்.
2. தன் நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்த பின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

(B) 1. நீர் ஆழம் கண்டாலும் நெஞ்சு ஆழம் காணமுடியாது.
2. மிதித்தாரைக் கடியாத பாம்பு உண்டோ?
3. உளவு இல்லாமல் களவு இல்லை.

## அற்லஸ் அறிவுக்கு விருந்து 281 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம்.சஞ்சீவன், 15 ஆவது மைல்கல், உடுப்பிட்டி.

**போட்டி: 02**
உ.வத்ஷலன்,
B2 2/4, மாளிகாவத்தை தொடர்மாடி, கொழும்பு - 10.

**போட்டி: 03**
மப்ரினா நஸார், 44/1, மடிகே உடத்தலவின்ன, கண்டி.

**போட்டி: 04**
சி.கோவலன், 77, தாழ்வுபாடு வீதி, மன்னார்.

**போட்டி: 05**
ஜாவிட் ஹக், 20/2, பாடசாலை கு.வீதி, மாவடிச்சேனை.

**பாராட்டுப்பெறுவோர்:**

தி.நிகாஷன், கரவெட்டி.
மாஹிதா ரிஸ்வி, பேருவளை.
ஏ.மனாஸ், புத்தளம் .
ஜெ.நந்தகுமார், வவுனியா,
செ.பிரித்திகா, கல்முனை.
எம்.நிம்பாஸ், நிந்தவூர் - 22.
ரிஃப்கா ரிஸ்வான், தெமட்டகொட.
எம்.நஷீஃப், திஹாரி.
எஸ்.சுனிசா, தெரணியகலை.
எஃப்.ஹாஜரா, துந்துவை.

## விஜய் வாசகர் மடல்

**நீ** தாங்கி வரும் புராதன தகவல்கள் தொடக்கம் நவீன தகவல்கள் வரை அனைத்தும் மாணவர்களாகிய எமக்குப் பெருமளவில் பயன்தருகின்றன. 'வாரம் ஒரு நாடு', 'பொது அறிவுத்துளிகள்' மற்றும் உலக நடப்புகள் என்பனவற்றை சுவாரஸ்யமாகத் தரும் பாணி வியக்கவைக்கின்றது.

**- ம.மழாஹிரா, தரம் 10^A, அல் - ஹிரா மு.ம.வித்., கிண்ணியா.**

**உ**ன்னில் பிரசுரமாகின்ற 'சங்கிலி மன்னன்' வரலாற்றுத் தொடரின் சில தொடர்களை நாங்கள் நாடகமாக நடித்து, மக்களின் பலத்த பாராட்டைப் பெற்றோம். விஜய்க்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**- த.சிவலிங்கம் ஞானம், ஆச்சிரம வீதி, சுன்னாகம் தெற்கு.**




**நீ** எமக்கு அள்ளி வந்த விடயங்களில் 'கனிய வளங்கள்', 'இயற்கைப் பானங்கள்', 'செவ்வாய் மற்றும் நிலவில் விவசாயம்' உட்பட, சகல ஆக்கங்களும் எனது சந்தேகங்களை நிவர்த்தி செய்யக் கூடியதாக அமைந்தன.

**- எஃப்.சரிகா, தரம் - 8, விஹாரமகாதேவி ம.கல்., கண்டி.**

**'இ**ராமாயணம்', 'சங்கிலி மன்னன் வரலாறு' உட்பட, பல்வேறு விதமான ஆக்கங்கள் பிரசுரமாவதால் அனைத்தையும் வாசித்து பல்துறை அறிவைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

**- தி.பிதுர்சன், தரம் 10, கோளாவில் விநாயகர் ம.வித்.,கோளாவில்.**

**'பூ**மியைப் பற்றி அறிந்துகொள்வோம்' என்ற ஆக்கம் தாங்கி வந்த தகவல்கள் சிறப்பானவை. 'ஆதிவாசிகளின் குடியிருப்புக்கள்' மற்றும் பல சுவாரஸ்யமான, அறிவுபூர்வமான ஆக்கங்களைத் தாங்கி வந்தமைக்கு நன்றி. அறிவுசார் வாரப்பத்திரிகை என்றால் 'விஜய்'தான் என்று கூறுமளவுக்கு எமது உள்ளத்தில் இடம்பிடித்திருகின்றாய்.

**எம்.வஸீம், அல் - மீஸானிய்யா அ.கல்., குருகொட.**

**'வி**ண்வெளித் தகவல்கள்', 'பென்சிலின் ஆரம்பகாலம்' என்பன மிகவும் நன்றாக இருந்தன. 'பிள்ளைகளின் பாதுகாப்பு' பற்றிய ஆக்கம் சிந்திக்கத் தூண்டுகிறது. 'இராமாயணம்', 'சங்கிலி மன்னன்', 'ஒல்லாந்தர்' போன்ற வரலாற்றுத் தொடர்கள் சுவாரஸ்யமாகவும் பாடசாலைக் கல்வியுடன் தொடர்பு பட்டிருப்பதாலும் அதீத பயனை அளிப்பவையாக உள்ளன.

**- எஃப்.சஹ்லா, தரம் 8^E, பதுரியா ம.கல்., மாவனல்லை.**




**'ந**கரும் குப்பைத்தொட்டி' பற்றி வாசித்த பின்னர் எமது நாட்டில் இது விரைவில் அறிமுகமாகாதா? என்று ஏங்கினேன். ஏனெனில், நாம் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளில் குப்பையும் ஒன்று. தவிர, 'பூமியைப் பற்றி அறிந்துகொள்வோம்' ஆக்கம் புவியியல் பாடத்திற்குப் பெரும் துணையளித்தது. அத்துடன், 'ஆதிவாசிகளின் குடியிருப்புக்கள்', 'பொஸ்வானா','இயற்கையின் காவலன்', 'கறுவாப்பட்டை' உட்பட அனைத்து ஆக்கங்களிலும் ஏராளமான தகவல்கள் பொதிந்திருந்தன.

**- ரொமேஸ் கௌதம், அளுத்மாவத்தை வீதி, கொழும்பு - 15.**

**க**ணினி தொடர்பாக குறைந்தளவு தகவல்களையே நீ பிரசுரித்தாலும், அவை நிறைவான பயனைத் தருகின்றன. 'பென்சிலின் ஆரம்பம்', 'குழந்தைகளைப் பாதுகாப்போம்', 'சங்கிலி மன்னன் தொடர்', 'கனியவளங்கள்', 'மாணவர் ஆக்கங்கள்', 'விண்வெளித் தகவல்கள்' என ஒவ்வொன்றும் அவற்றுக்கே உரிய தனித்துவத்துடன் மிளிர்கின்றன.

**- த.ரம்யா, தபாற்கந்தோர் வீதி, மஸ்கெலியா.**

இந்த இதழில் (27.10.2010) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.
அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 03.11.2010.

**அனுப்ப வேண்டிய முகவரி:**



வாசகர் மடல்,
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கிலி மன்னனின் அவையில் இருந்த பெரும்பாலான அமைச்சர்களின் கருத்துக்களும் ஒரே மாதிரியாகவே இருந்தன. படையுதவிகள் பெற்றாவது பறங்கியரை ஒடுக்க வேண்டும் என்று அவர்கள் மன்னன் சங்கிலிக்கு ஆலோசனை வழங்கினார்கள்**



# பறங்கியரை வென்றிட சங்கிலியின் முயற்சி




அரியாலையூர் சி.சிவதாசன்

''எதை அவசரம் இல்லை என்று கூறுகிறீர் அப்பாமுதலி. நீர் கூறுவதைப் பார்த்தால் உமக்கும் அப்பறங்கியருக்கும் தொடர்பு இருப்பது போலல்லவா தெரிகிறது. உம்மை முன்பு நம்பியதாலேயே அந்தப் பறங்கியருக்கு தங்க இடம் கொடுத்தார் எங்கள் மன்னர்'' என்று நாட்டுப்பற்றுள்ள ஓர் அமைச்சர் கூறியதும் அப்பாமுதலி, ''ஐயோ! இது கொடுமை மன்னவா! இந்த அமைச்சரின் கூற்று என்னைப் பறங்கியரின் நண்பன் என்றல்லவா நம்ப இடமளிக்கிறது. இதனை என்னால் பொறுக்க முடியாது. என்மீது தவறிருந்தால் என்னைக் கொன்றுபோடுங்கள்'' என்று எதுவும் தெரியாதவன்போல் கபட நாடகமாடினான் மந்திரி அப்பாமுதலி.

அதுகேட்ட சங்கிலி மன்னன், ''குற்றம் புரிந்தவன் மாதிரி அல்லவா? நீங்கள் பேசுகிறீர்கள். இப்பொழுது நாம் என்ன செய்யவேண்டும் என்பதை மட்டும் சிந்தியுங்கள்'' என்றான். அமைச்சன் அப்பாமுதலியால் எதுவும் கூற முடியவில்லை. அப்படியே ஆசனத்தில் அமர்ந்துவிட்டான்.

சங்கிலி மன்னன் மேலும் அவையோரைப் பார்த்துக் கூறலானான், ''கோவையில் இந்தப் பறங்கியர் கூட்டம் குடிகொண்டுள்ளது. அவர்கள் இங்குள்ள பறங்கியருக்கு உதவ விரைந்து வருவார்கள். அவர்களை இங்கு வரவிடாமல் தடுத்துவிட்டால் இங்கிருப்பவரை ஓட ஓட விரட்டி விடலாம். இதுவே என் யோசனை''

''மன்னவா! கொழும்புக் கோட்டையிலும் அந்தப் பறங்கியருக்கு கொஞ்சப் பலம் இருக்கிறது. அங்கே அவர்கள் ஆட்சி நடப்பதால் வலிமை மிக்கவர்களாகவும் இருக்கிறார்கள். எம்மைக் காட்டிக்கொடுத்திட எங்களுக்குள்ளும் ஒருசில கள்ளரும் இருக்கிறார்கள். எனவே, தமிழ் நாடாம் தென்னிந்தியாவிலிருந்து நாம் படைபலம் பெற வேண்டும்'' என்றான் இன்னுமோர் நல்லமைச்சன். அவன் யோசனையை மன்னன் சங்கிலி ஏற்றுக்கொண்டான்.

அங்கிருந்த பெரும்பாலான அமைச்சர்கள் கற்றறிந்த அந்த நல்ல அமைச்சன் கூறியவை சரியானது என மன்னனிடம் தெரிவித்தனர். அனைவருடைய எண்ணக் கருத்துக்களும் ஒன்றாக மன்னன் சங்கிலி தமிழகத்தின் தஞ்சாவூர் சேவப்ப நாயக்கருக்கு படை உதவி கோரி முதலில் ஓலை அனுப்பினான். அவ்வோலையில், ''வேல் வேந்தே! நீங்கள் உதவி செய்வதற்காக யாழ்ப்பாணம் வரவேண்டுமென்பதில்லை.அங்கு கோவையில் இருக்கும் பறங்கியரை இங்கே வரவிடாமல் தடுத்தாலே போதும்'' என அவன் எழுதியிருந்தான்.

*மன்னன் சங்கிலியின் வேண்டுகோளை ஏற்று அவனுக்கு உதவுவதற்கு தஞ்சாவூர் சேவக்க நாயக்கரும் சீதாவாக்கையின் வேந்தன், மாயாதுன்னையும் முன்வந்தனர்*

அவ்வோலை கண்ட சேவப்ப நாயக்கர் ''நண்பனே! நல்மனம் கொண்ட யாழ்ப்பாணப் பேரரசின் வேந்தனே! பறங்கியரைப் பந்தாட நீ தொடுக்கும் போரில் உதவிக்கரம் நீட்ட இந்தச் சேவப்பன் எப்பொழுதும் தயாராகவே இருக்கிறான். கோவையில் இருக்கும் பறங்கியரைக் கடல் கடக்க நான் ஒருபோதும் அனுமதியேன். அவர்களின் நடமாட்டத்தை எமது ஒற்றர்கள் நன்கு அவதானித்தவண்ணம் இருப்பர். நீ எதற்கும் அஞ்சவேண்டாம். இது நான் என் இனத்திற்குச் செய்யும் பேருதவி ஆகும்'' எனப் பதிலோலை அனுப்பியிருந்தான்.

மேலும், சங்கிலி கோட்டையை அண்டிய தென்பகுதி சீதாவாக்கையின் வேந்தன் மாயாதுன்னைக்கும் ஓலை அனுப்பினான். அதில் ''மதிப்புக்குரிய சீதாவாக்கை மன்னன் மாயாதுன்னைக்கு சங்கிலி மன்னன் எழுதும் ஓலை இது. பறங்கியரைப் பழிவாங்கத் துடிக்கும் உமக்கு நல்லதொரு சந்தர்ப்பம். கொழும்புக் கோட்டையின் புறநகர் எங்கும் குழப்பம் விளைவித்து துஷ்டரை அங்கேயே தடுத்து அவர்கள் எங்கும் செல்ல முடியாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் இங்கு நாடு பிடிக்க முனையும் அந்தப் பறங்கியரான போர்த்துக்கேயரை நான் எம்மவர் மூலம் ஓட ஓட விரட்டுவேன்'' என வேண்டியிருந்தான்.

மன்னன் மாயாதுன்னையும் அதற்குச் சம்மதம் தெரிவித்து ஓலை அனுப்பியிருந்தான். மேலும், சங்கிலி மன்னன் வலிகாமத்தாருக்கும் பச்சிலைப் பற்றியாருக்கும் போருக்கான உதவி அழைப்பு விடுத்து, துஷ்டனாம் ஊர்காவற்றுறையின் வேந்தன் காக்கை வன்னிக்கும் ஓலை அனுப்பினான். அத்தோடு, மன்னார்ப் பிரதேசத்தின் எல்லை எங்கும் கடுங்காவல் இட்டான். போர்ப்பிரியரான மறவர் அனைவருக்கும் நீண்ட போர்ப் பயிற்சி கொடுத்தான். இவ்வாறு நல்லூரில் போருக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகையில் அமைச்சர்களான அப்பாமுதலியும் பரநிருபசிங்கனும் இங்கு நடக்கும் ஏற்பாடுகள் அனைத்தையும் ஒன்றும் விடாமல் அப்படியே அந்தப் பறங்கியருக்கு காக்கை வன்னி மூலம் தெரியப்படுத்திக்கொண்டிருந்தனர்.

இதை அறிந்த போர்த்துக்கேயர்கள் தளபதி பிரகன்சா தலைமையில் கப்பலேறி பூநகரிக் கடல் பகுதியில் நங்கூரமிட்டு அக்கப்பலில் இருந்து படகுகளில் கொழும்புத்துறை துறைமுகத்தில் வந்திறங்கினர். சங்கிலி மன்னனுக்கு இச்செய்தி ஒற்றர்களால் அறிவிக்கப்பட்டது. கோபங்கொண்ட சங்கிலி மன்னன் படைத் தளபதி இமயாணரை அழைத்து ஈழ நாடாம் எம்மண்ணகத்தின் யாழ்ப்பாண அரசின் ஈடில்லா தளபதியாரே! எங்கள் அனுமதியின்றி கொழும்புத்துறையின் துறைமுகத்தில் போர்த்துக்கேயப் பறங்கியர்கள் வந்து இறங்கியுள்ளார்கள். இறங்கிய அந்த எத்தர்களை இப்போதே துரத்தவேண்டும். நம் தாய் நாட்டின் மானம் காக்க வேண்டும். அடிவாங்கியது போதாதென்று திரும்பவும் வந்துள்ள பறங்கியர் கூட்டத்தை விரட்டி அடிக்க வேண்டும். உடனே தக்க படையினரைத் தயார்ப்படுத்தும்'' என உரைத்தான்.

மன்னவனின் ஆணைதனை சிரமேற்கொண்டு மாவீரர் சூழ்ந்த பெருஞ்சேனையொன்றை இமயனார் அணிவகுக்க, போர்க்கவசம் பூண்டு மேலும் தக்க பரிவாரங்கள் சூழ அன்னை வீரமாகாளியின் வேண்டுதலுக்காக அவள் ஆலயம் நோக்கிப் புறப்பட்டான் மன்னன் சங்கிலி.

(தொடரும்)

# தந்தையர் தினம் தோன்றியது எப்படி?





சொனாரா


1909 ஆம் ஆண்டு வாஷிங்டனிலுள்ள கிறிஸ்தவ தேவாலயமொன்றில் அன்னையர் தினம் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டதைக் கேட்ட சொனாரா ஸ்மார்ட் டொட் என்னும் பெண்ணுக்கு தனது இளமைக்காலம் பற்றிய நினைவுகள் மனதில் எழுந்தன. அவருக்கு ஐந்து சகோதரர்கள். சொனாராவுக்கு பதினாறு வயதாக இருந்த போது, அவரின் தாயார் ஆறாவது குழந்தையை பிரசவித்துவிட்டு மரணமானார்.

தாயாரின் இறப்பை அடுத்து அவரின் தந்தையாரான வில்லியம் ஜெக்சன் ஸ்மார்ட் தனது ஆறு குழந்தைகளையும் வளர்த்து ஆளாக்குவதற்கு மிகுந்த துயரத்தை அனுபவித்தார். தனது தந்தையாரை நினைக்கையில் சொனாராவின் கண்கள் குளமாகும். இந்நிலையிலேயே அவர் அன்னையர் தினம் அனுஷ்டிக்கப்படுவது போல தந்தையர் தினமும் அனுஷ்டிக்கப்படவேண்டும் என்று குரல் கொடுத்தார். அதனையடுத்து, அரசியல் ரீதியாக தந்தையர் தினம் முக்கியத்துவம் பெற்றது.

முதலாவது தந்தையர் தினம் 1910 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி வாஷிங்டனில் கொண்டாடப்பட்டது. எனினும் அதனைக் கொண்டாடுவதற்கான நிரந்தர அங்கீகாரம் கிடைக்கவில்லை.


1972 ஆம் ஆண்டு ஜனாதிபதி நிக்ஷன் தந்தையர் தினத்தை அனுஷ்டிப்பதற்கான சட்டத்தை உருவாக்கினார். தற்போது உலகம் முழுவதும் தந்தையர் தினம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# கிரஃபிக் தொழிற்பாட்டை விரைவாக்கும் புதிய மைக்ரோ சிப் அறிமுகம்



இன்டெல் நிறுவனத்தினால் புதிதாக மைக்ரோ சிப் ஒன்று அடுத்தவருடம் முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டில் சந்தைக்கு வரவுள்ள கணினியிலேயே இந்தப் புதிய மைக்ரோ சிப் பொருத்தப்பட்டிருக்கும். இந்த மைக்ரோ சிப்பிற்கு இடப்பட்டுள்ள சங்கேதப் பெயர் சென்டி பிரிட்ஜ் (Sandy Bridge) என்பதாகும். இந்த சிப்பின் சிறப்பம்சம் என்னவென்றால், மைக்ரோ புரொஸெஸருடன் (C.P.U - Central Processing unit) குறித்த கிரஃபிக் சென்டி பிரிஜ்ஜை (Sandy Bridge) ஒன்றாக இணைப்பது கடினமாகும்.



கிரஃபிக் புரொஸெஸர் எனப்படுகின்ற சிப்பானது கிரஃபிக் கார்ட்களிலேயே காணப்படுகின்றன. பொதுவாக புரொஸெஸரானது மதர் போர்டின் பிரதான சிப்பாகவே காணப்படுவதுண்டு. இவை இரண்டுக்குமான தொடர்புகள் மதர் போர்டின் ஊடாகவே பேணப்படுகின்றன.

இதன்போது இந்த இரண்டு பாகங்களுக்கிடையே தகவல், தரவுப் பரிமாற்றம் செய்து கொள்வதற்கு அதிக நேரமும் அதிக வலுவும் விரயமாகின்றது. ஆனால் இந்த இரண்டு சிப்களும் ஒன்றாக அருகருகே ஒரே தகட்டில் பதிக்கப்பட்டிருப்பதன் மூலம் எந்தவொரு வலுவையும் கொண்ட அல்லது எந்தவொரு ரகத்தையும் சேர்ந்த கிரஃபிக் உருவத்தை வழங்குவதற்கு செலவாகின்ற நேரம் மிகவும் குறைவாகும். காரணம் புதிய கண்டுபிடிப்பின்படி, இரண்டு சிப்களும் ஒரே தகட்டில் அருகருகே பதிக்கப்பட்டிருப்பதேயாகும். இதன் காரணமாக டெஸ்க் டொப் மற்றும் லெப்டொப் கணினிகளில் வலு விரயம் குறைக்கப்படுகின்றது.

**எந்தவொரு வலுவையும் கொண்ட அல்லது எந்தவொரு ரகத்தையும் சேர்ந்த கிரஃபிக் உருவத்தை வழங்குவதற்கு செலவாகின்ற நேரம் மிகவும் குறைவாகும்**

இதனால், லெப்டொப்களில் உள்ள பெட்டரியின் பாவனைக் காலமும் அதிகமாகின்றது. இந்த புதிய சிப்பானது புரட்சிகரமான திருப்புமுனை என்று இன்டெல் நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்த சிப் தொழில்நுட்பத்தினால் தகவல் பரிமாற்றம் வேகமானது, நான்கு மடங்காக அதிகரிக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம் என்றும் நிறுவனம் மேலும் தெரிவிக்கின்றது.

இன்டெல் சென்டி பிரிட்ஜினால் (Sandy Bridge) தற்போது பாவனையிலுள்ள நிவிடியா (Nividia) கிராஃபிக்கிற்கு சந்தையில் பலத்த சவால் ஏற்படும் என்று கருதப்படுகின்றது.

இதன்படி இனிவரும் காலங்களில் சென்டி பிரிட்ஜ் சிப்பானது முதன்மை நிலை மைக்ரோ சிப்பாகத் திகழும் என்பது திண்ணம்.









இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2010, ஒக்டோபர் மாதம் 27 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday October 27, 2010.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org